விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 23 புதன்கிழமை (09.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 294

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# அரசியல் பிரச்சினையை பேசித்தான் தீர்க்க வேண்டும்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆலோசனை



(யாழ்ப்பாணம்)

தமிழருக்கான நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசித்தான் தீர்வுகாணவேண்டும் என்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக தாங்கள் தெரிந்து வைத்திருப்பதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடனான சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இரண்டு நாள்பயணமாக நேற்று முன்தினம் வருகை தந்த இந்தியவெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் நேற்று யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் மேறகொண்டிருந்தார். இதன்போது வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் சந்தித்து கலந்துரையாடினார்

19-ம் பக்கம் பார்க்க

## இந்தியா வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதை இந்தியா வரவேற்றுள்ளது.

இதனை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்துள்ளார்.

யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்றுமாலை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சருடனான சந்திப்பின் போது சல்மான குர்ஷித் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

20-ம் பக்கம் பார்க்க

## சல்மான் குர்ஷித் யாழ்.வந்தார்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அவர் தெல்லிப்பழை பிரதேசசெயலாளர் பிரிவில் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு வீடுகளை திறந்து வைத்து அதன் உரிமையாளர்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வு பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது. இதன் பின்பு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

19-ம் பக்கம் பார்க்க

## வடபகுதி கணக்காளர்களுக்கு அதிரடி இடமாற்ற உத்தரவு!

### 13 சிங்களவர்கள் புதிதாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் கணக்காளர்களுக்கு அதிரடியாக இட மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

திறைசேரியின் உத்தரவுக்கு அமைய வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரால் இவ் இடமாற்ற உத்தரவு நேற்று மாலை தொலைநகல் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் இயங்கும் 12 கல்வி வலயங்களில் கடமையாற்றும்

19-ம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியுடன் குர்ஷித் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், நேற்று காலை ஜனாதிபதி இல்லத்தில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ரா்ஜபக்ஷவை சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கான அபிவிருத்தி மூலோபாய நோக்கங்களின அடிப்படையில் பல்வேறு பரஸ்பர நலன்கள் குறித்த விடயங்கள

19-ம் பக்கம் பார்க்க

# சபாநாயகர் சித்தார்த்தன்; 4 அமைச்சர்களும் தெரிவு

## வெள்ளியன்று சத்தியப்பிரமாணம்



த.சித்தார்த்தன் சபாநாயகர் | ப.சத்தியலிங்கம் சுகாதார அமைச்சர் | பா.டெனிஸ்வரன் உள்ளூராட்சி நிர்வாக அமைச்சர் | த.குருகுலராஜா கல்வி அமைச்சர் | பொ.ஐங்கரநேசன் விவசாயம், கால்நடை, நன்னீர் மீன்பிடித்துறை அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் சபாநாயகராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின உயர்பீடத்தகவல்கள்தெரிவிக்கின்றன.

இதேவேளை பிரதி சபாநாயகர் பதவி முல்லைத்தீவு மாவட்டத்திறத வழங்கப்படவுள்ளதாகவும்தெரியவருகிறது.

வடக்குமாகாண சபைத்தேர்தலில மூன்றில் இரண்டு பெரும்பான்மை யுடன் ஆட்சியமைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டு நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணமும் செய்து கொண்டுள்ளார்.

வடக்குமாகாணசபையின்அமைச்சர்கள் தெரிவு தொடர்பான முழு அதிகாரத்தையும் முதலமைச்சரான க.வி.விக்னேஸ்வரனிடம் வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன முதலமைச்சர் சத்தியப்

19-ம் பக்கம் பார்க்க

# தெரிவுக்குழுதான் பிரச்சினைக்குத் தீர்வு



## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

13-வது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டுமாயின் நாடாளுமன்ற தெரிவுக்குழுதான் சரியான தளம் என்று தாம் எண்ணுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக முன்வைக்கப்படும் உள்நாட்டு தீர்வு குறித்து தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாக இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம் அவர் குறிப்பிட்டுள்ளார்.


ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இருவரும் அரசியல்நிலைமைகள்குறித்து

20-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அமைச்சுப் பதவி கோரி முல்லை.மக்கள் ஆர்ப்பாட்டம்



இலங்கையின் வடமாகாண சபையில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அமைச்சுப் பதவியொன்று வழங்கப்பட வேண்டும் என்று அங்குள்ள பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து கவனயீர்ப்பு நடவடிக்கையின் மூலம் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

முல்லத்தீவு மாவட்டத்தில் உள்ள பெண்கள் அமைப்புக்கள், விவசாய, மீன்பிடித்துறை சார்ந்த அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் முல்லைத்தீவு அரச செயலகத்தின் முன்னால் கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் வீதியோரத்தில் கூடி நின்று தமது கவனயீர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

சுனாமி பேரலைகளினாலும், யுத்தத்தினாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டம் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ள அவர்கள், தமது மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள நான்கு மாகாண சபை உறுப்பினர்களில் ஒருவருக்கு ஓர் அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனிடம் மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு அனுப்பி வைப்பதற்காக தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர்களாகிய டாக்டர் சிவமோகன் மற்றும் எம்.ரவிகரன் ஆகியோரிடம் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கையளித்துள்ளனர்.

நான்கு பேர் அடங்கிய மாகாண சபை அமைச்சரவையை அமைப்பதற்காகப் பல தடவைகள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளின் தலைவர்கள் கூடி பேச்சுக்கள் நடத்தியுள்ள போதிலும், இன்னும் முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மாகாணசபை அமைச்சர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் விபரங்களை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-11)

## தவறிவிட்டது


மிருசுவில் வடக்கு மிருசுவிலைச் சேர்ந்த S.சரவணபவன் ஆகிய எனது 840513211V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், வாகன காப்புறுதி, வரிப்பத்திரங்கள் A-35, புதுக்குடியிருப்பு-வட்டுவாலைக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**T.P: 077 344 6657** (சி-5113)

## காணி விற்பனைக்கு


அளவெட்டி கணேஸ்வரத்தில்
4 பரப்புக் காணி உடன்
விற்பனைக்குண்டு. ஜெயா பிறஸ்
சந்தியில் இருந்து ஏறத்தாழ 50 யார்
தொலைவில் இக்காணி உள்ளது.

**தொடர்புகளுக்கு:**
**0114949234**
(4127)



06.10.2013 யாழ். மாவட்ட ரீதியில் நடைபெற்ற கராத்தே சுற்றுப்போட்டியில் 60Kg எடை குமிடே பிரிவில் பி.திருமாறன் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டார். அருகில் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். (4131)

# முதலமைச்சரின் பதவியேற்பை கொண்டாடிய மூதாட்டி



(சென்னை)

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் நல்லாட்சி புரிந்து எம் மக்களை காக்க வேண்டும். எம் மக்களுக்கு தனிச் சுதந்திரம் பெற்றுக் கொடுக்க வேண்டும். இனியும் எம் மக்கள் எங்களைப் போல அகதிகளாக செல்லக் கூடாது என தமிழகத்திலுள்ள இலங்கை அகதியான மூதாட்டி ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கைப்பையுடன் சென்ற 75 வயதுடைய மூதாட்டியொருவர், இந்திய தேசிய கொடியை எடுத்து உயர்த்திப் பிடித்துக் கொண்டபடி **இந்தியா வாழ்க... இலங்கையில் தமிழினம் வாழ்க...** என்று கோஷம் இட்டுள்ளார்.

அதனைத்தொடர்ந்து தன் கைப்பையில் வைத்திருந்த பட்டாசு வெடிகளை எடுத்து வைத்து வெடிக்க செய்தார்.

இந்த மகிழ்ச்சிக் கொண்டாட்டத்திற்கான காரணம் பற்றி குறித்த மூதாட்டி தெரிவிக்கையில்,

நான் ஈழத்து பெண். என் பேரு காசியம்மாள். அகதியாக இந்தியா வந்தேன் என்னை தோப்புக்கொல்லை முகாமில் தங்க வைத்தார்கள்.

என்னைப் போலவே என் தமிழின மக்கள் அகதிகளாக இங்கு மட்டுமல்லாமல் உலக நாடுகள் எங்கும் போகிறார்கள். இன்று அவர்களை ஆள தமிழன் முதலமைச்சராக பொறுப்பு ஏற்கிறார்.

அந்த விக்னேஸ்வரன் நல்லாட்சி செய்து எம் மக்களை காக்க வேண்டும். எம் மக்களுக்கு தனிச் சுதந்திரம் பெற்றுக் கொடுக்க வேண்டும். இனியும் எம் மக்கள் எங்களைப் போல அகதிகளாக செல்லக் கூடாது.

அதற்காகத்தான் பதவி ஏற்பு நாளில் பட்டாசு வெடித்து இந்திய தேசிய கொடியுடன் வந்தேன்.

இந்தியா எம் மக்கள் வாழ உதவ வேண்டும். அதற்காகத் தான் இந்திய தேசிய கொடியை உயர்த்தினேன் என சந்தோசம் பொங்க தெரிவித்தார் ஈழத்து மூதாட்டி. (எ-11)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது வித்தியாலய ஆசிரியர்
**திரு. வீ. சந்திரமோகன்** அவர்கள்
"பிரதீபா பிரபா" விருதினை பெற்றதையிட்டு
பெருமையடைவதுடன் மேன்மேலும் பல விருதுகளைப்
பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள் :
அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்.
கிளி/விவேகானந்தா வித்தியாலயம்.

அம்பாள்குளம்,
கிளிநொச்சி. (4132)

# மேர்வினின் செயலாளர் கடத்தப்பட்டுள்ளார்

அமைச்சர் மேர்வின் சில்வாவின் இணைப்புச் செயலாளரும் அவரது பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் நேற்று கொழும்பில் வைத்து கடத்தப்பட்டுள்ளதாக மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேர்வின் சில்வாவின் இணைப்புச் செயலாளரான ஜே.டி. திலக்கசிரி என்றழைக்கப்படும் ஹட் திலக்கசிரி என்பவரும் அவரது பாதுகாப்பு அதிகாரியும் கொழும்பு டி.ஆர் விஜயவர்த்தன மாவத்தையில் வைத்து நேற்று மதியம் கடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் பயணித்த ஜீப் அப்பகுதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகவும் ஜீப்பின் திறப்பு வீதியில் வீசப்பட்டிருந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கையடக்க தொலைபேசிகள் இரண்டு மற்றும் பாதணிகள் இரண்டும் அவர்களின் வாகனத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-11)

## கௌரவிப்பு நிகழ்வு

(மல்லாகம்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழியில் அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெற்ற ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலய மாணவன் ச.தனுராஜ் உட்பட அப்பாடசாலையில் சித்திபெற்ற மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. [illegible] கிரிதரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ)

## மகனே... இது இமயத்தின் அடிவாரம்....!!

வடமராட்சிக் கிழக்கினைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வதிவிடமாகவும்
கொண்ட திரு. சங்கரப்பிள்ளை புஷ்பாகரன் – திருமதி கனகசிறீ (நந்தா)
தம்பதியினரது அன்பு மகனும் யா/ கரவெட்டி திருஇருதயக் கல்லூரியின்
மாணவனுமாகிய செல்வன்



**பு. மகிர்தன்**
(188 புள்ளிகள்)
புலமைப்பரிசில் பரீட்சை 2013
கரவெட்டி கோட்ட நிலை - 1
வடமராட்சி வலய நிலை - 2

மகனே!
உனக்கேயுரிய தேடலுக்கும், தற்துணிவிற்கும்
மதிநுட்பத்திற்கும் உன் அன்னை தந்தையரின்
அயராத அர்ப்பணிப்புக்களுக்கும்,
துவளாது கல்வியமுதூட்டிய
வகுப்பாசிரியை சுசி குடும்பத்தினருக்கும்,
ஆளுமைமிகு அதிபர் திரு. இராகவன் அவர்களுக்கும்
வாழ்த்துக் "கிரீடம்" சூட்டி மெய்மறக்கின்றோம்...!
மகனே...!
இது இமயத்தின் அடிவாரம்.....!!
அஞ்சா நெஞ்சமும், அயரா முயற்சியும் கொண்டு
நீ... இமயத்தின் சிகரத்தைத்தொட வாழ்த்தும்....

(சி-5116)

சம்பந்தர் கடை வீதி,
கரவெட்டி.

வாஞ்சைக்குரிய
உன் பெரியப்பா, பெரியம்மா, அன்புத் தம்பி எழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மண்பானை மகத்துவம்

"எங்க அம்மா ஒரு மண்குடம் வாங்கிக் கொடுத்தார்! அதை எடுத்துக் கொண்டுபோய் என் மனைவியிடம் கொடுத்தேன். அவர் அதை ஒருபொன்குடமாக மாற்றிவிட்டார்!" என்றார் ஒருவர்.

"எப்படி அது?" என்று கேட்டேன். "ஒன்றுமில்லை! கீழே போட்டு உடைத்துவிட்டார்!" என்றார்.

"அப்படியானால், அது எப்படி பொன்குடமாக மாறும்?" என்றேன்.

"நீங்கள் பழமொழி கேட்டதில்லையா? மாமியார் உடைத்தால் மண்குடம்! மருமகள் உடைத்தால் பொன்குடம்! என்று. இது மருமகள் உடைத்தது. அதுதான் பொன் குடம்!" விளக்கம் சொன்னார் அவர்.

மருமகள் உடைக்கவில்லை என்றால் கூட இந்தக் காலத்தில் மண்குடம்-பெண்குடம் மாதிரித்தான். மண் பானையில் அவ்வளவு மகத்துவம் இருக்கிறது.

தண்ணீரை சுத்தமாக்கி குடிப்பதற்கு இப்பொழுது பல பேர் "வோட்டர் பில்டர்" உபயோகப்படுத்துகிறார்கள். அதே மாதிரி தண்ணீரைக் குளிர்ச்சியாக வைக்க பிரிட்ஜ் உபயோகப்படுத்துகிறார்கள்.

இந்த இரு செயல்களையும் செலவே இல்லாமல் செய்து கொடுப்பது தான் மண்பானை! உலோகப் பாத்திரங்களில் நீர் ஊற்றி வைத்திருந்தால் அதில் கிருமிகள் அதிகமாவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால் மண்பானையில் நீர் ஊற்றி வைத்தால் அப்படி ஆவதில்லை. நீரிலுள்ள கிருமிகளையெல்லாம் உறிஞ்சி விடுவதால் குடிநீர் சுத்தமாகி விடுகிறது.

அந்தக் காலத்திலேயே நமது முன்னோர்கள் இதை நன்றாக புரிந்து வைத்திருக்கிறார்கள். மண்பானை என்பது ஒரு தலைசிறந்த "வோட்டர் பில்டர்" என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஐதராபாத்தில் உள்ள உணவு ஆராய்ச்சிக் கழகம் இதைக் கண்டுபிடித்திருக்கிறது. இதற்கு பின்பும் நாம் சும்மா இருக்கலாமா? உடனே போய் ஒரு மண்பானை வாங்கிக் கொண்டு வந்து விட வேண்டியது தானே!

முதலில் பானையை எடுத்துக் தட்டிப்பாருங்கள்! வெண்கலப் பாத்திரத்தை தட்டுவது மாதிரி சத்தம் கேட்டால் அது நல்லபானை.

பானைக்கு வெளிப்பக்கம் கறுப்புத் திட்டாக தெரியும். பளபளப்பாகவும் இருக்கும். பானை நன்றாக வெந்திருக்கிறது என்று அர்த்தம். வேறு ஒன்றுமில்லை. சிலது சாம்பல் பூத்து, சொரசொரப்பாக இருக்கும். அது வேண்டாம் வெளிப்பாகத்தில் இருப்பதை போன்று உள்பக்கமும் கறுப்புத் திட்டு இருந்தால் அதை வாங்க வேண்டாம். கொஞ்ச நாளில் உடைந்து விடும்.

புதுப்பானையில் தண்ணீரை ஊற்றியவுடன் "உஸ்" என்ற சத்தம் கேட்கும் பானையில் களிமண்ணுடன் கலந்திருக்கும் மணல் நீரை உறிஞ்சும் சத்தம் தான் அது. பானைக்கு வெளிப்பக்கமோ, உள்பக்கமோ சீமெந்து பூசியிருந்தால் வேண்டாம். அதனால் உஷ்ண காற்று உள்ளேயே தங்கி விடும். தண்ணீர் குளிர்ச்சியாக இருக்காது.

என்னதான் இருந்தாலும் செலவில்லாமல் கைக்கு எட்டிய தூரத்தில் இருக்கும் மண்பானைத் தண்ணீருக்கு ஈடு எதுவுமில்லை. உடனடியாக உண்மையாக தாகத்தை தணிப்பது அதுதான்!

ஒரு பெரிய சங்கீத வித்துவான் கடம் வாசிப்பார். ஒரு கச்சேரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அதற்கு முதல் மனைவியைக் கூப்பிட்டு "உன்கையால் 'ஜில்' என்று தண்ணி கொண்டு வந்துகொடு குடித்து விட்டுப் போகிறேன்" என்றார்.

அந்த அம்மாவும் கொண்டு வந்து கொடுத்தார். வாங்கிக் குடித்தார். வெயிலுக்கு இதமாக இருந்தது.

"ஆகா! மண் பானைத் தண்ணியா? கால மறிந்து நடப்பதில் உன்னை எவரும் மிஞ்ச முடியாது! ரொம்ப தாங்ஸ்" என்றார்.

"உங்களுக்குத்தான் தாங்ஸ் சொல்ல வேண்டும்" என்றார் அந்த அம்மா.

"ஏன்?" என்று கேட்டார் இவர்.

"நேற்று, இன்று ஒரு தகவல் கேட்டேன். இன்றைக்கு நம் வீட்டில் மண்பானையாக உபயோகப்படுத்துவதே உங்கள் 'கடம்'தான்! ரொம்ப தாங்ஸ்" என்றாராம் அந்த அம்மா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தொ.நு.கல்வி திணைக்களத்தில் பல்வேறு பதவி வெற்றிடங்கள்

(கொழும்பு)

இளைஞர் அலுவலகள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆய்வு கூட உதவியாளர், பண்ணை முகாமையாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் (சிவில்/இயந்திரவியல்) பதவிக்கான விண்ணப்பதாரர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஏதேனும் ஒரு பாடம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான, கணிதப் பிரிவில் ஒரே தடவையில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் தேசிய தொழிற்தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்திற்கான சான்றிதழைப் பெற்றிருப்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

ஆய்வுகூட உதவியாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மொழி, விஞ்ஞாணம், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களும் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் தொழில்நுட்பவியல் துறைசார் பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பண்ணை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பதாரர்கள் க.பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் மொழி, கணிதம் உட்பட ஒரே தடவையில் ஆறு பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் அத் துறைசார் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பமுடிவுத்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் எதிர்வரும் 11 ஆம் திகதி வெளியாகும் வர்த்தமானிப் பத்திரிகைக்கு அமைய விண்ணப்பங்களை தயார் செய்து பரீட்சைக் கட்டணங்களை மக்கள் வங்கிக் கிளையின் 176-100-139026228 என்னும் கணக்கிலக்கத்திற்கு செலுத்தி பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பதாரியின் முகவரி குறிப்பிடப்பட்டு 30 ரூபா முத்திரை ஒட்டப்பட்ட நீள கடித உறையொன்றும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

இவ் விண்ணப்பம் தொடர்பான மேலதிக விபரங்களை எதிர்வரும் 11 ஆம் திகதி வெளியாகும் வர்த்தமானிப் பத்திரிகையில் அல்லது வலம்புரி காரியாலயத்தில் பார்வையிடலாம். (அ-7)

# மஹோற்சவ காலத்தில் ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மஹோற்சவத்தை முன்னிட்டு உற்சவ காலத்தில் நடைபெற்று வரும் தெய்வீகப் பேருரை தினமும் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்று வருகிறது.

தொடர்ந்து இன்று புதன்கிழமை "பகவத் கீதை" என்ற விடயப் பொருளில் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் இச் சொற்பொழிவை வழங்கவுள்ளதோடு நாளை வியாழன் "வெண்ணை அளைந்த பிரான்" எனும் விடயப் பொருளுடனான சொற்பொழிவை விரிவுரையாளர் ச.லலீசன் வழங்கவுள்ளார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை "மாருதி" என்ற விடயப் பொருளில் ஆசிரியர் க.கைலை நாதன், 12 ஆம் திகதி "திருமங்கை ஆழ்வார்" எனும் விடயப் பொருளில் ஆசிரி யர் நித்தியதசீதரன் ஆகியோர் சொற் பொழிவை நிகழ்த்தவுள்ளனர். (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-120 | 110 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 100 |
| தக்காளி | 100 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 60 |
| கோவா | 50 | 50 | 80 |
| கரட் | 50 | 40 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 90 | 70 | 120 |
| பாகற்காய் | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 80 |
| பயற்றங்காய் | 40 | 100 | 120 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 20 | 15 | 40 |
| கறிமிளகாய் | 70 | 50 | 120 |
| முருங்கைக்காய் | 40 | 40 | 100 |
| போஞ்சி | 100 | 80 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 |
| தேசிக்காய் | 450 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 35-45 |
| இராசவள்ளி | — | 70 | 120 |

# இராசி பலன்

09.10.2013
(புரட்டாதி 23, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 11.32 மணிவரை
அனுசம் பிற்பகல் 2.17 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
அமிர்த சித்தம்

**மேடம்**

ஒரு வேலையை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், விரயங்கள் கூடும், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**இடபம்**

பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்**

உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், கடன் பிரச்சினைகளை சுமுகமாக தீர்ப்பீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**கடகம்**

தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கைகள் துளிர் விடும் நாள்.

**சிங்கம்**

வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், மறக்க முடியாத சில சம்பவங்கள் இடம் பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி**

உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், கைமாற்றாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம்.

**துலாம்**

புத்திசாலித்தனமாக செயற்பட்டு புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், பொருளாதார நிலையில் முன்னேற்றங்கள் ஏற்படலாம், போசன ·சுகமுண்டு.

**விருச்சிகம்**

வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும் , எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**தனுசு**

இடமாற்றத்தால் இனிய மாற் றம் காண வேண்டிய நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கலாம்.

**மகரம்**

தொழில் முன்னேற்றமுண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேர லாம், சேமிப்பை அதிகரிக்க நினைப்பீர்கள், காரிய நன்மையுண்டு.

**கும்பம்**

வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், புதிய திட்டங்கள் கைகூடும், ஆரோக்கியமான நாள்.

**மீனம்**

தடைகள் விலகி தனவரவுகள் பெருகும் நாள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நல்லூர் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாத போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் நல்லூர் கிளை நூலகத்தினால் மாணவர்கள் மற்றும் நூலக அங்கத்தவர்களிடையே நடத்தப்படும் போட்டிகளில் பங்கு பற்ற விரும்புவோர் தம்மைப் பதிவு செய்து கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி முன்பள்ளி மாணவர்களுக்கான வர்ணம் தீட்டுதல், முன்பள்ளி மற்றும் ஒன்று முதல் தரம் 5 வரையான மாணவர்களுக்கான சிறுவர் செயற்பாடுகள், 2 முதல் தரம் 5 வரையான மாணவர்களுக்கான சித்திரம் வரைதல் மற்றும் தரம் 2 மாணவர்களுக்கான ஒன்று முதல் 10 வரையான ஆத்திசூடி, ஒன்று முதல் 10 வரையான கொன்றை வேந்தன் மனனம் போன்ற போட்டிகள் நடத்தப் படவுள்ளன.

இவற்றுடன் 3 முதல் தரம் 5 வரையான மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி இடம்பெறவுள்ளதுடன் தரம் 3 மாணவர்களுக்கு திருக்குறளின் ஒன்று முதல் 3 வரையான அதிகாரங்களிலும் தரம் 4 மாணவர்களுக்கு ஒன்று முதல் 4 வரையான அதிகாரங்களிலும் தரம் 5 மாணவர்களுக்கு ஒன்று முதல் 5 வரையான அதிகாரங்களிலும் மனனப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

கதை சொல்லும் போட்டி ஒன்று முதல் தரம் 5 வரையான மாண்வர்களுக்கும் பொது அறிவுப் போட்டி தரம் 10, 11 மாணவர்களுக்கு நடைபெறவுள்ளதோடு கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, சிறுவர் ஆக்கம் கையெழுத்துப் பிரதிப் போட்டி என்பனவும் இடம்பெறவுள்ளன. மேற்படி போட்டி களில் கலந்து கொள்ள விரும்புவர்கள் தமது பெயர் விபரங்களை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் கிளை நூலகத்தில் பதிவு செய்து கொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)




நன்றி:- மிரர்

# வலி.கல்வி வலய உத்தியோகத்தர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்

## தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் எனவும் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் அரசாங்க உத்தியோகத்தர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெறும் உள்ளக இடமாற்றம் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

நேற்றுக் காலை 9 மணியாளவில் இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்த சுமார் 60 இற்கும் மேற்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள், தமக்கான தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனவும் எச்சரிக்கை விடுத் தனர்.

இதனால் அலுவலகப் பணிகள் பல மணி நேரம் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. இந்தப் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,



காகிதத் தாள்களுக்குக்கூட இங்கு தட்டுப்பாடாகவுள்ளது. இதனை நிவர்த்தி செய்வதை விடுத்து, மேசையில் வைப்பதற்கு பூச்செண்டுகளைத் தருகின்றனர்.

இந்நிலையில் உள்ளக இடமாற்றம் என்ற போர்வையில் பழிவாங்கல் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

ஒரு மாதத்துள் நான்கு தடவைகளுக்கு மேலாக இங்கு பணிபுரியும் உத்தியோகத்தர்கள் இடம்மாற்றம் செய்யப்படுகின்றனர்.

இதனைவிட தளபாடங்கள் உள்ளிட்ட இதர பொருட்களை மேல் மாடியிலிருந்து கீழ் தளத்துக்கும் கீழ்த் தளத்திலிருந்து மேலுமாக அடிக்கடி இடம்மாற்றி பணிபுரியும் உத்தியோகத்தர்களையும் அலைக்கழிக்கின்றனர்.

இடமாற்றத்திற்கு என்று ஒரு கொள்கையிருக்கின்றது. ஆனால், இவ் வலயத்தில் மட்டும் அது பின்பற்றப்படுவதில்லை.

ஒரு பிரிவில் ஏதாவது பிரச்சினை என்றால் அது தொடர்பில் உரிய முறையில் விசாரணை செய் வதை விடுத்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை இடம்மாற்றி மனஉளைச்சலுக்கு அவர்களை ஆளாக்குகின்றனர். மேலும் எழுத்து மூலமான மாற்றங்களைச் செய்யாது வாய்மொழியாக தமது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் இடமாற்றங் களை மேற்கொண்டு வருகின்றனர்.

தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக வலயக் கல்விப் பணிப்பாளரும் கணக்காளரும் செயற்படுவதாகவும் பல குற்றச்சாட்டு களையும் முன்வைத்து பணிப் புறக்கணிப்பில் இவர்கள் ஈடுபட்டனர்.

இதேவேளை, இது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளருடன் சந்திப்பை ஏற்படுத்தி தகவல் அறிய முற்பட்டபோதிலும் தனது அறையிலேயே அமர்ந்திருந்த பணிப்பாளர் ஊடகவியலாளர்களை அவரது அறையின் உள்ளே அனுமதிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-6)

# மாலுசந்தி மைக்கல் வி.கழக வருடாந்த விளையாட்டு விழா

(கரவெட்டி)

வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில், அழைக்கப்பட்ட யாழ்.மாவட்ட முன்னணி அணிகள் பங்கு பற்றும் உதைபந்தாட்ட ஆரம்ப நிகழ்வு, இன்று புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில், கழகத் தலைவர் எஸ்.செல்வதீபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சுபச்செல்வன், சிறப்பு விருந்தினர்களாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், வே.சிவயோகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் வி.எம்.வேதாபரணம், நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.ஹாங்கரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இத் தொடரின் முதல் போட்டியில், வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகையும் இரண்டாவது போட்டியில் இளவாலை யங்ஹன்றிஸ் அணியை எதிர்த்து இமையாணன் மத்திய அணியும் மோதவுள்ளன. (அ-9-24)

# நவாலி மகாவித்தியாலய பரிசளிப்பு விழா

யாழ்.நவாலி மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் இரா. வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, சிறப்பு விருந்தினர்களாக வலிகாம கல்வி வயலத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி பணிப்பாளர் ச.சிவானந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக சுலோஷனா ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதியத்தின் பொறுப் பாளர்களான திரு திருமதி சந்திரசேகரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வின், நிறுவுநர் நினைவுப் பேருரையை வட பிராந்திய டீஎஸ்சிசி வர்த்தன வங்கியின் முகாமையாளர் ச.இரவீந்திரா ஆற்றவுள்ளார். (அ-9-26)








யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனத்தளர்வா? தனிமையா?**
**வாழ்க்கையில் வெறுப்பா?**

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம். உடனே அழையுங்கள். இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

**கைகொடுக்கும் நண்பர்கள்**
**021 222 8117**

(சி-5002)


## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விபரம்

இவ்வாண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித் தியடைந்த மாணவர்களின் விபரங் களை பாடசாலைகளின் அதிபர்கள் அறிவித்துள்ளனர். இதன்படி சித்தியடைந்த மாணவர்களின் விபரம் வருமாறு,

**மு/பாரதி வித்தியாலயம்**

வீ.வினோஜன்-172, கா.கலைவர்ணன்-166, அ.இலக்கியன்-161, சி.யாழ்வேந்தன்-161, மூதிருமாறன்-156, க.சஜீவனா-156, ஏ.லக்சிகா-156

**யா/கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி**

கி.லதுர்ஷன்-188, க.நிதர்சன்-154

### கால்நடை அபி.கூ.சங்க பொதுக் கூட்டம்

சாவகச்சேரி கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் இவ்வாண்டிற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆண்ணயாளர் வி.கே. அருந்தவநாதன், சிறப்பு விருந்தினராக யு.என்.டி.பி. நிறுவனத்தின் பிராந்திய திட்ட இணைப்பாளர் செ. ஞானகணேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் உச்சக் கடன் எல்லை, பால் உற்பத்தித் தொழிற்சாலையின் எதிர்காலத் திட்டம் தொடர்பாக ஆராயப்படவுள்ளதுடன் அடுத்த ஆண்டிற்கான நிர்வாக தெரிவும் இடம்பெறவுள்ளது.

எனவே சங்கத்தின் அங்கத்தவர்களைத் தவறாது சமுகம் கொடுக்குமாறு சங்கசெயலாளர் செ.வடிவேல் அறிவித்துள்ளார். (அ-9-29)

### இலவச ஏடுகள் விநியோகம்

விஜயதசமி காலத்தில் ஏடு தொடக்கும் பாடசாலைகள், நிறுவனங்கள், ஆலயங்கள் என்பவற்றுக்கு மதுரம் கிட்ஸ் முன்பள்ளியினால் இலவசமாக ஏடுகள் வழங்கப்படும் என அதன் நிர்வாக இயக்குநர் எஸ்.கே. கிருபாஹரன் அறிவித்துள்ளார். (அ-5)


## ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

- நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வரட்சி, சருமவியாதி, இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்புவலி, சொறி, சிரங்கு, தொடை இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
- இந்நோய்களுக்கு பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா? இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

## ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

- எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்சி, இருமல், மலச்சிக்கல், வெள்ளைபடுதல், மாதவிடாய்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பலவகை நோய்களுக்குரிய அதிர்ஷ்ட ஆஸவங்கள், குவாதங்கள், சூரணங்கள், குளிகைகள், சிறப் வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீலி பேதிக் குளிகைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்!

- இளமைத் துடிப்பு மிக்க முழுமையான திருப்திகரமான பாலியல் இன்பத்தை பெற பாவியுங்கள் "சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்"

நீங்கள் நாட வேண்டிய இடம்:

**சிவா நறுமணப் பூங்கா**

இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திர சந்திக்கு அருகில்) தொ.பேசி. : 021 222 2567

(சி5105)



# WANTED

**for immediate employment in a modern multispecialty hospital**

1. Medical Officer with MBBS qualification (Local or Foreign Qualification)
2. Qualified and Experienced Nurses, Pharmacists preferably with SLMC registration from govt. or private sector on Part Time / Full Time basis.

Attractive Salary offered

Director, Human Resources,
**Northern Central Hospitals (Pvt) Ltd**
342, Palaly Road, Jaffna.

(C-5042) (06.10.2013)



## சிவபூமி முதியோர் இல்லம்

தொல்புரம்

**முதியோர் விழாவும்**
**அமரர் கே.பத்மநாதன்**
**மண்டபத் திறப்பு விழாவும்**

**காலம்: 09.10.2013 புதன்கிழமை**
**நேரம் : காலை 10 மணி**


**நிகழ்ச்சி நிரல்**

- சிவபூமி வைரவர் ஆலய வழிபாடு
- திருமுறை
- புதிய மண்டபம் திறந்து வைத்தல் (உயர்திரு. ஸ்ரீதர் பத்மநாதன்)
- நினைவுருவப்படம் திரை நீக்கம் (உயர்திரு. ரி.பேரின்பநாயகம் (இளைப்பாறிய DIG)
- மாலை அணிந்து மரியாதை செய்தல் திருமதி சிவபத்மராணி பத்மநாதன்
- தலைமையுரை - கலாநிதி ஆறு திருமுருகன். (தலைவர், சிவபூமி அறக்கட்டளை)
- வரவேற்புரை - திரு.ம.தயாகரன் (இணைச் செயலாளர், சிவபூமி அறக்கட்டளை)
- ஆசியுரை - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் (குரு முதல்வர், நல்லை ஆதீனம்) சிவஸ்ரீ சு.சுந்தரராஜக் குருக்கள் (வழக்கம்பராய் அம்மன் கோயில்)
- பிரதம விருந்தினர் உரை: திரு.வி.மகாலிங்கம் (துணைத் தூதுவர், இந்திய தூதுவராலயம்)
- நிறைவுரை - திரு.ஸ்ரீ.விக்னேஸ்வரன் (இணைச் செயலாளர், சிவபூமி அறக்கட்டளை)
- மதிய உணவு
- நிறைவு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிர்வாக சபை, சிவபூமி முதியோர் இல்லம், தொல்புரம் சுழிபுரம்.

(4125)

## நவராத்திரி பாமாலை

### மௌனம் ஏன் தாயே?

எம் வாழ்வு வளம் பெற
வர மருள்வாய் தாயே லஷ்மி
செல்வம் கொழித்த
எம் திருநாடு வறுமையில்
வாழ்விழந்து போகின்றதம்மா
வள்ளல்கள் பலர் வாழ்ந்த பூமியில்
பசிக்காய் பலர் ஏங்குவது கண்டும்
ஏன் இன்னும் மௌனம் தாயே?

**எஸ். தப்னி**
**(யா/வண்.ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்)**

அன்பு மாணவச் செல்வங்களே! நவராத்திரிப் பாமாலைக்கு தங்களிடமிருந்து கவிதைகளை எதிர்பார்க்கின்றோம். தங்கள் கவிதைகளை **"வலம்புரி" நவராத்திரிப் பாமாலை, இல: 2 , 3 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## யாழ். மத்திய கல்லூரியில் உலக உளநல தினம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வழிகாட்டலும் ஆலோசனையும் சேவைப் பிரிவினரால் உலக உளநல தின நிகழ்வுகள் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயத்தின் வழிகாட்டலும் ஆலோசனையும் சேவைப் பிரிவின் ஆசிரிய ஆலோசகர் ஏ.ஜே.புத்திசிகாமணி கலந்து சிறப்பிக்கவுள்ளார். அத்தோடு **முதுமையின் உணர்வினைப் போற்றுவோம்** எனும் தொனிப்பொருளில் சிறப்புரையை கல்லூரியின் வழிகாட்டலும் ஆலோசனை சேவைப் பிரிவின் இணைப்பாளருமான ப.திருஞானசம்பந்தன் ஆற்றவுள்ளார்.

கலை நிகழ்வுகளில் எஸ்.ரி.குமரனின் நெறியாள்கையில் **எங்களின் சிற்பிகள்** என்ற நாடகமும் இடம்பெறவுள்ளது. (அ-9-21)


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1976
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா: 26.5 சூரி, செவ் 6 இல்.
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: முதுகலைமாணி (பிரதேச திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் (அரச)
தொ.இ:B748

பிறப்பு: 1975 இந்து (V)
நட்சத்திரம்: ரோகினி 1
கி.பா. 33.25 செவ். 12இல்
உயரம்: 5'6"
தகைமை/ தொழில்: A/L சொந்தக் கடை (நிரந்தரம்)
தொ.இ:B751

பிறப்பு: 1980 இந்து (குருகுலம)
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா:02
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: M.Sc Eng. Singapoore
தொ.இ:B756

பிறப்பு: 1987 இந்து விஸ்வகுலம்
நட்சத்திரம்: திருவாதிரை 2
கி.பா:26.75
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L சுவிஸ் (Not PR)
தொ.இ:B758

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து (V)
நட்சத்திரம்: சுவாதி 3
கி.பா :40.75 சூரி, செவ்:10இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: B.Sc (Hons) பட்டதாரி பயிலுநர் (அரச)
தொ.இ:G752

பிறப்பு: 1985 இந்து (V)
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா :56
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர் (அரச)
தொ.இ:G754

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா :54 செவ்: 4ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BCA பட்டதாரி (UK PR) Asst. Account
தொ.இ:G757

பிறப்பு: 1991 இந்து விஸ்வகுலம்
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா :22.25, 12 இல் செவ்.
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
தொ.இ:G759

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**
**(சர்வதேச இலவச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நல்லிணக்கத்தை அரசாங்கம் விரும்பவில்லை

## புலிகளின் அடையாளங்கள் அழிக்கப்பட இதுவே காரணம் என்கிறார் சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு பின்னராக இடம்பெறும் அராஜகச் செயல்கள் அரசாங்கம் தேசிய நல்லிணக்கத்தை விரும்பவில்லை என்பதைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அடையாளங்களையும் மாவீரர் துயிலுமில்லங்களையும் அவர்களின் நினைவுச் சின்னங்களையும் அழிப்பதன் மூலம் மக்களின் மனங்களில் இருந்து அவற்றின் நினைவுகளை அழித்துவிட முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னரான காலப் பகுதியில் விடுதலைப் புலிகளின் அடையாளங்கள், நினைவுச் சின்னங்கள் இராணுவத்தினரால் அழித்து வரப்படுவது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கிலுள்ள மாவீரர் துயிலுமில்லங்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் நினைவுச் சின்னங்களை அரசாங்கம் அழித்து வருகின்றது.

இதன்மூலம் அரசாங்கம் தான் நினைப்பவற்றை செய்து முடிக்க முயற்சிக்கின்றது. விடுதலைப் புலிகளின் தியாகச் செயல்கள் வெறும் நினைவுச் சின்னங்களாக மட்டுமல்லாது மக்களின் மனங்களில் அவை அழியாது நிலை கொண்டுமுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அடையாளங்களை மட்டும் அழித்து வரும் அரசு தன்னால் நிர்மாணிக்கப்பட்டுள்ள 2009 ஆம் ஆண்டின் போர் வெற்றிக்கான அடையாளங்களையும் அழித்து விடுமா?

அரசின் போர் வெற்றிச் சின்னங்கள், போர் வெற்றி கொண்டாட்டங்கள் இங்கு வீரமிகு விடுதலைப் போராட்டம் ஒன்று நடைபெற்றது என்பதை ஆண்டாண்டு காலம் தமிழினம் வாழும் வரை தமிழருக்கு நினைவுபடுத்தி நிற்கும்.

பாராளுமன்றத்திற்கு முன்பாக கூட போரில் கொல்லப்பட்ட இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் நினைவுச் சின்னங்கள் நிறுப்பட்டுள்ளன. இவர்கள் சாதாரணமாகவோ அல்லது விபத்தினாலேயோ உயிரிழக்கவில்லை. வீரமும் தீரமும் மிக்க விடுதலைப் போராட்டத்திலேயே கொல்லப்பட்டனர் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

அரசு காட்டுமிரண்டித்தனமாகவும் அடக்குமுறையுடனும் தொடர்ந்து செயற்பட்டு வருவதை இவ்வாறான சம்பவங்கள் உறுதிப்படுத்தி வருகின்றன. இதன் காரணமாகவே வடக்கு மாகாண சபைத் தேர்தலின் மூலம் தமிழ் மக்கள் அரசின் கன்னத்தில் ஓங்கி அறைந்துள்ளனர் என்றார். (அ-4)

## 35 அரச நிறுவனங்களுக்கு ம.உ. ஆணைக்குழு அழைப்பு

அரச நிறுவனங்களில் 35 நிறுவனங்களுக்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது. சர்வதேச சிறுவர் தினத்தன்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கு கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் காரணங்களை கேட்டறிந்து கொள்வதற்கே குறித்த நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவிற்கு நாளை வியாழக்கிழமை சமுகம் தந்து விளக்கமளிக்குமாறே அறிவித்தல் விடுத்துள்ளது.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர், பரீட்சைகள் ஆணையாளர், கல்வியமைச்சின் செயலாளர் உள்ளிட்டோருக்கே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சிறுவர் தினத்தன்று பெறுபேறுகளை வெளியிடுவதனால் பிள்ளைகள் மனநிலை மற்றும் உடநிலை ரீதியில் பாதிக்கப்படுதல் மற்றும் சிறுவர் கொள்கைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பணியகத்தின் தலைவர் தெரிவித்தார். (அ-2)

## கொழும்பு தேசிய வைத்தியசாலை வைத்தியர்கள் சாதனை

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் விபத்து ஒன்றின் போது உடலிருந்து துண்டிக்கப்பட்ட ஆண் ஒருவரின் பிறப்பு உறுப்பு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சையின் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மீளப் பொருத்தப்பட்டுள்ளது.

புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதான குடும்பஸ்தர் ஒருவரின் ஆணுறுப்பே இவ்வாறு துண்டிக்கப்பட்டு பின் பொருத்தப்பட்டதாகும்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சைப் பிரிவு வைத்தியர்களும் ஏனைய வைத்தியர்களும் கூட்டாக இணைந்து துண்டிக்கப்பட்ட ஆணுறுப்பை தொடர்ந்து 12 மணித்தியாலயங்கள் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை மூலம் மீளப்பொருத்தியுள்ளார்.

துண்டிக்கப்பட்ட ஆணுறுப்பு ஒன்றை மீளவும் பொருத்தி வழமை நிலைமைக்கு கொண்டு வந்த முதல் சந்தர்ப்பமாக இது கருதப்பட வேண்டுமென கொழும்பு தேசிய வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நோயாளியை வைத்தியசாலையில் அனுமதித்த நேரம், துண்டிக்கப்பட்ட உறுப்பை பாதுகாப்பாக எடுத்து வந்த விதம் ஆகியன இந்த அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொள்ள உதவியது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாகவும் குறித்த நபர் இயல்பு வாழ்க்கையை தொடர முடியும் எனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

முற்று முழுதாக துண்டிக்கப்பட்டிருந்த ஆணுறுப்பு வெற்றிகரமாக மீளப் பொருத்தப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் குறித்த நபர் இவ்வுறுப்பின் செயற்பாடுகளையும் தடையின்றி மேற்கொள்ளக் கூடிய வகையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

குறித்த உறுப்பு துண்டிக்கப்பட்டமை தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

## ஆயுர்வேத ஆய்வுத் திட்டத்திற்கு பெயர் விபரங்களை சமர்ப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் மஹிந்த சிந்தனைக்கு அமைவாக சுதேச மருத்துவம் சார் ஆய்வுகளை ஊக்குவித்து தேசிய சுகாதாரம் சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திட்டம் ஒன்று சுதேச வைத்திய அமைச்சினால் அமுல்படுத்தப்படவுள்ளதாக மாகாண சுதேச ஆணையாளர் டாக்டர் சி.துரைரட்ணம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இத்திட்டத்தின் கீழ் நீரிழிவு, குருதிச் சுற்றோட்டம் தொடர்பான நோய்கள், சிறுநீரக நோய்கள், டெங்கு, புற்றுநோய் என்பன உள்ளடக்கப்படுகின்றன.

இவ் ஆய்வுகள் தொடர்பில் தேசிய ரீதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும், ஆற்றலும் ஆர்வமும் உள்ள ஆயுர் வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் சகல மட்டங்களிலும் உள்வாங்கப்படவேண்டும், பரம்பரை வைத்தியர்களின் திறமைகளும் உள்வாங்கப்பட வேண்டும் போன்ற விடயங்கள் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற வேலைப்பட்டறையில் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்த அடிப்படையில் மேற்குறித்த விடயப்பரப்பு சார் ஆய்வுகளை மேற்கொள்ள ஆர்வமுள்ள பாரம்பரிய வைத்தியர்கள் தமது ஆய்வு முன்மொழிவுகளை தயார் செய்து சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக மேற்குறிப்பிட்ட துறைகளில் விசேட நிபுணத்துவம் உள்ள பாரம்பரிய வைத்தியர்கள் தமது பெயர் விபரங்களை ஆயுர்வேத பாதுகாப்புச் சபைகள் ஊடாக உடன் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ)

## அம்பாறையில் 4.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம், பாணமவில் 4.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

இந்நிலநடுக்கம் நேற்று முன்தினம் பிற்பகல் வேளையிலேயே உணரப்பட்டுள்ளது.

கடலுக்கடியில் 400 கிலோ மீற்றர் தூரத்திலேயே இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக குறித்த பணியகம் அறிவித்துள்ளது.

இலங்கையில் கடலுக்கு அடியில் மிகப் பெரிய வெடிப்பு ஏற்பட்டிருப்பதால் நிலநடுக்க அபாயம் இருப்பதாக புவியியல் வல்லுநர் திசாநாயக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கை புவியியல் பேராசிரியர் சி.பி. திசாநாயக்க இலங்கையின் கடல் பகுதி மற்றும் நில்நடுக்கங்கள் பற்றி ஆராய்ச்சி நடத்தி வருகிறார்.


இலங்கைக்குரிய பூமி பகுதியில் சுமார் 500 முதல் 600 கிலோ மீற்றர் தூரத்தில் தெற்கு கடலில் பூமிக்கு அடியில் பாரிய வெடிப்பு ஏற்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் தெற்கு மற்றும் தென் மேற்கு திசையில் புதிய புவி அடுக்கு உருவாகி வருவதால் இந்த வெடிப்பு ஏற்பட்டு வருகிறது என்றும் அவர் எச்சரித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

## மரண அறிவித்தல்

### வன்னிய சிங்கம் மனோன்மணி

(லாலா சோப் உரிமையாளரின் மனைவி)



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லாலா சோப் உரிமையாளரின் மனைவி வன்னிய சிங்கம் மனோன்மணி 07.10.2013 அன்று மாலை 4.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வருகின்ற வியாழக்கிழமை 10.10.2013 காலை 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு வல்லை முழங்கன் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :** லாலா சோப் உரிமையாளர், பொ.வன்னியசிங்கம்
விஜயபால குமாரினி, விஜயராஜ் யசோதா
விஜய தர்ஷினி சுபதாஸ், விஜய பாரதி
பெறாமக்கள்: சசிதரன் மனோஜா, ஈஸ்வரன் கஜேந்தினி, சுயேந்திரன்

(4122)

## யோகாசன பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். யோகா அரங்கத்தினால் நடத்தப்படும் யோகாசனப் பயிற்சிப் பட்டறை நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை தினமும் பிற்பகல் 5 மணிக்கு நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளும் ஆர்வலர்களுக்கு கையேடுகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நடந்து முடிந்த தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த திருக்குடும்ப கன்னியர் மடம் மாணவியும் நிலானியின் செல்வப் புதல்வியுமான **தர்சனா** அவர்களை கொழும்பில் உள்ள எஸ்.இளங்கோ பெரியப்பா (லங்கா சலுசலா). பெரியம்மா. நிசாந் அண்ணா (யாழ்.காலணியகம் பாட்டா கடை) லண்டனில் உள்ள கபிலன் அண்ணா, பானு அண்ணா. மதி அண்ணா ஆகியோர் மனமார பாராட்டுவதுடன் ஊக்கமளித்த பாடசாலை அதிபர். ஆசிரியர்கள், அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.




**தகவல்:**
நிசாந்த் அண்ணா.

(4123)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டில் சைபிரஸ் கலந்து கொள்ளும்

கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள தாம் எதிர்பார்த்திருப்பதாக சைபிரஸ் ஜனாதிபதி நிகோஸ் அனாஸ்டேசியாடேஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சைபிரஸ் ஜனாதிபதியை அவரது மாளிகையில் சந்தித்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அழைப்பை விடுத்தார்.

அமைச்சர் பீரிஸை வரவேற்ற சைபிரஸ் ஜனாதிபதி, அமைச்சரின் வருகையானது இலங்கைக்கும் சைபிரஸுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 50 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும் என தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கும் சைபிரஸ் வெளிவிவகார அமைச்சர் லோனிஸ் கோஸ்சசோலிடேஸ் இடையில் இடம்பெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்தும் உடனடியான பொறிமுறை கட்டமைப்பொன்றை ஏற்படுத்த சைபிரஸ் வெளிவிவகார அமைச்சர் இணக்கம் வெளியிட்டுள்ளார்.

இதனைத் தவிர இரட்டை வரிவிதிப்பு மற்றும் விமான சேவைகள் தொடர்பான உடன்படிக்கைகளை மேற்கொள்ளவும் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# புத்தகாயாவுக்கு செல்ல அச்சப்பட வேண்டாம்

இந்தியாவிலுள்ள புத்தகாயா உட்பட அங்குள்ள பௌத்த புனித தலங்களுக்கு செல்லும் இலங்கை யாத்திரீகர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அஸ்கிரிய மாநாயக்கர் உடுகம ஸ்ரீபுத்தரக்கித்த தேரர் தெரிவித்தார்.

இந்த பௌத்த தலங்களுக்கு இந்திய மத்திய அரசு மற்றும் பீகார் மாநில அரசும் முழுமையான பாதுகாப்பை வழங்கி வருகின்றன எனவும் அவர் கூறினார்.

புத்தகாயா மற்றும் தம்பதிவ உள்ளிட்ட இந்தியாவிலுள்ள பௌத்த தலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் பற்றி ஆராய ஸ்ரீ புத்தரக்கித்த தேரர் அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார். இந்தியாவில் இருந்து நாடு திரும்பியுள்ள அவர் இந்த தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கியுள்ளார்.

புத்தகாயா பௌத்த விகாரை மீது, கடந்த ஜூலை மாதம் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை அடுத்து அங்கு யாத்திரை செல்லும் இலங்கை பக்தர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஐ.தே.கட்சியை யாரும் விலை கொடுத்து வாங்க முடியாது

## எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து சிலர் விலகியிருக்கலாம். ஆனால், உண்மையான ஐக்கிய தேசியக் கட்சியை எவரும் விலை கொடுத்து வாங்க முடியாது. அரசாங்கத்தின் குறைகளை மறைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியை குழப்ப நினைப்பது முட்டாள்தனமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வின் போதே ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் எவருக்கும் அஞ்சாது கட்சிக்காகவும் மக்களுக்காகவும் செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சுரைக்காய்

Botanical Name- Lagenaria Siceraria
Family- Cucurbitaceae
Engl- Bottle Gourd
Sinh-Diyo Labu

இது நடுத்தர பருமனுடைய ஏறுகொடி. ஐந்து முகங்களையுடைய தண்டுடையது. ஒன்றுவிட்ட தனி இலையமைப்பு உடையது. அகலமான இலைகள் தோளவடிவானவை. இலைகளின் விளிம்புகள் அரிவாள் உருவானவை. இலைகளின் இரு பக்கங்களும் உரோம அமைப்புடையன. இலைகளின் கீழ்ப் பக்கத்தில் நரம்பமைப்புக்கள் தெளிவாக காணப்படும். B-13cm நீளமான இலைக் காம்புகளையுடையது. இலைக் காம்புகள் உருளை வடிவானதாகவும் உரோம அமைப்பிலும் இருக்கும். இதனுடைய தந்திக் கம்புகள் பிளவுபட்டுக் காணப்படும். அதிலும் உரோமங்கள் காணப்படும். இதனுடைய பூக்கள் மண்ணிறம் கலந்த வெண்ணிறமானவை. ஒரு பாலானவை. பெரிய பழங்கள் நிறைய விதைகளையுடையவை. வெள்ளை நிறமானவை. வருடம் முழுவதும் பூக்கும்.

100g சுரைக் கீரை, சுரைக்காயிலுள்ள சத்துக்கள்

| | சுரைக்காய் | சுரை இலை |
|---|---|---|
| புரதம் (g) | 0.2 | 2.3 |
| கொழுப்பு (g) | 0.1 | 0.7 |
| நார்ப்பொருள் (g) | 0.6 | 1.3 |
| மாவுப்பொருள் (g) | 2.5 | 6.1 |
| கல்சியம் (mg) | 20 | 80 |
| பொஸ்பரஸ் (mg) | 10 | 59 |
| இரும்பு (mg) | 0.7 | -- |
| தயமின் (mg) | 0.03 | -- |
| ரைபோபிளேவின்(mg) | 0.01 | -- |
| நியாசின் (mg) | 0.2 | -- |
| மக்னீசியம் (mg) | 5 | -- |
| சோடியம் (mg) | 1.8 | -- |
| பொட்டாசியம் (mg) | 87 | -- |
| தாமிரம் (mg) | 0.03 | -- |
| கந்தகம் (mg) | 10 | -- |
| குளோரின் (mg) | 5 | -- |
| சக்தி (k cal) | 12 | 39 |

சுரைக்காயில் இருவகையுண்டு. ஒன்று இனிப்பு. மற்றொன்று கைப்பு. கைப்புக்கு காட்டுச்சுரை, பேய்ச்சுரை என்ற பெயருண்டு. இது உணவுப்பொருட்களுள் காய்கறி வகைகளுள் ஒன்றாகும்.

இதன் இலையை குடிநீரிட்டு சர்க்கரை கலந்து காமாலை நோய்க்கு கொடுக்கலாம்.

கொடியைக் குடிநீரிட்டு வீக்கம், பெருவயிறு, நீர்க்கட்டு இவைகளுக்கு கொடுப்பது வழக்கம்.

சுரைக்காயின் சதையை வெப்பத்திலுண்டாகும் தலைவலிக்கு நெற்றியில் வைத்துக் கட்டலாம்.

சுரைக்காயை சமைத்துண்ண சிறுநீர் தாராளமாக வெளியாகும். உடலுக்குக் குளிர்ச்சி உண்டாகும். உடலின் வெப்பத்தைக் குறைக்கும். இதன் காய்க்கு இருதயத்தை பலப் படுத்தும் தன்மையும் உணவில் சுவையை அதிகரிக்கும் குணமும் உண்டு. பெண்களுக்கு ஏற்படும் வெண்கசிவுக் கோளாற்றை போக் கும் குணமும் உண்டு. ஈரலுக்கு உறுதியைத் தரும். இரத்த விருத்திக்கு உதவும், உடல்வலி, வறட்டு இருமலைப்போக்கும். இதன் தண்டிற்கும் இலைக்கும் மலமிளக்கும் தன்மையுள்ளது.

சுரைக்காயினால் செய்த சூப்பை அருந்த இரத்த அழுத்தம், நீரிழிவு, மஞ்சட்காமாலை, மூலநோய், இருதய நோய் நீங்கும். சுரைக்காயின் சாற்றுடன் எலுமிச்சம்பழச்சாற்றை சேர்த்து அருந்த சல எரிச்சல் நீங்கும். காயிலிருந்து சாறுபிழிந்து அத்துடன் சிறிதளவு உப்புச் சேர்த்து அருந்த தாகமும் களைப்பும் அடங்கும்.

வயிற்றுப்போக்கின் போது உண்டாகும் மிகு தாகத்திற்கும் இது நல்லது. நான்கு பங்கு சுரைக்காய்ச் சாற்றுடன் ஒரு பங்கு நல்லெண்ணெய்யைச் சேர்த்து தண்ணீர் வற்றும் வரை காய்ச்சி இறக்கி இதனை தலையில் தேய்த்து கொள்ள கண் எரிச்சல் நீங்கும். கண்ணுக்கும் குளிர்ச்சி உண்டாகும். பாதவெடிப்புக்கும் இதனைத் தடவலாம்.


வயிற்றுப்போக்கான நோய்களில் உடலிலிருந்து தண்ணீர் அதிகம் வெளியேறி இருக்



கும் சூழ்நிலையில் இக்காய்ச்சாற்றை இளநீரில் கலந்து 50 தொடக்கம் 100 மில்லி லீற்றர் வீதம் 10 நிமிடங்களுக்கு ஒருமுறை கொடுத்தால் நல்ல பலனைத் தரும்.

சுரைக்காயின் தோல் மூலநோய்க்கு உதவும். இதன்தோலை உலரவைத்து சுட்டு சாம்பலாக்கி அச்சாம்பலைப் பயன்படுத்த சிறுநீர் கழிக்கும்போது வலி ஏற்படுதல் குறையும். மேலும் இதற்கு புண்களை ஆற்றும் தன்மையும் உண்டு.

இலைக்கசாயத்துடன் சக்கரை கலந்து



காமாலைக்கு தரலாம். விதைகளிலிருந்து எடுக்கும் எண்ணெய் தலைவலியைப் போக்கும்.

இலைகளைச் சிறு துண்டுகளாக்கிப் பொரியல் செய்து உண்ணலாம்.

இதன் சாற்றுடன் எண்ணெய் சேர்த்துக்காய்ச்சி கண்டமாலைக்கு போட அது குணமாகும்.

நீரேற்றங்களை ஒழிக்க வேண்டில் சுரைக்காய் கீரையை உள்ளிப்பூண்டு சேர்த்துச் சமைத்து ஒரு மண்டலம் புசித்துவரினும் அல்லது கொடியை மட்டும் குடிநீர் செய்து குடிப்பினும் நலத்தைக் கொடுக்கும்.

காட்டுச் சுரைக்காயின் இலைக்கு குளிர்ச்சுண்டாக்கிச் செய்கையும் சிறுநீர்ப்பெருக்கி, உடலுரமாக்கி, பித்தமேனி போன்ற செய்கைகளும் காட்டுச் சுரையின் கொழுந்து இலைக்கு வீக்கத்தை உருக்கும் தன்மையும் முப்பிணிகளை நீக்கும் தன்மையும் வயிற்றை கழிக்கச் செய்யும் தன்மையும் காணப்படும்.

சுரைக்காய்க்கு ஈரல் நோய், மார்பு நோய்கள் என்பவற்றை நீக்கும் தன்மையும் காணப்படுகின்றது.

சுரைக்குத்தும்பி, சுலாபு, கொடிச்சுரை என்ற பெயர்களும் உண்டு. இதில் உருவத்திற்கேற்ப கும்பச்சுரை, பாம்புச்சுரை என்ற வகைகளும் உண்டு. இச்சுரையை ஆங்கிலத்தில் Bottle Gourd என்று அழைப்பர். சுரைக்காய் Bottle இன் உருவத்தை ஒத்திருப்பதால் இதனை இவ்வாறு அழைப்பர்.

வெப்ப காலங்களில் பயன்படுத்தக்கூடிய காய்கறிகளில் சுரைக்காய் முக்கியமானது. உடலுக்கு குளிர்ச்சியை தரக்கூடியது. உடலைப் பலப்படுத்தக்கூடியது.

பச்சையான மேற்றோல் சீவி உள்ளிருக்கும் சோறு பயன்படுத்தப்படும். இதன் இளம் இலைகளை சிறிதாக அரிந்தும் கீரைகளாக பயன்படுத்தலாம். இதன் இளம் வித்துக்களைச் சேர்த்து சமைத்தும் உண்ணுவது மிகவும் நல்லது. இதனை வேகவைத்து பருப்பு, உப்பு, மிள காய் சேர்த்து கடைந்து சாப்பிட்டால் மிகவும் நல்லது. வெள்ளைசாய்தல் உள்ள பெண்கள் வாரத்தில் இருமுறை சுரைக்காயை உணவு டன் சேர்த்துக்கொண்டால் வெள்ளை சாய் தலை குணமாக்கலாம்.

அடிக்கடி சிறுநீரில் எரிச்சல் உள்ளவர்கள் நன்னாரி, சுரைக்காயின் விதை, சிறு நெருஞ்சில், கண்டங்கத்தரி போன்றவற்றை சம அளவு எடுத்து குடிநீர் காய்ச்சி தினமும் 30 தொடக்கம் 60 மில்லிலீற்றர் வரை குடித்துவர சிறுநீரக கோளாறுகள், சிறுநீர் கழிக்கும்போது ஏற்படும் சிறுநீர் எரிச்சல் போன்ற உடற்கோளாறுகள் தீரும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

### கஞ்சி தயாரித்தல்

புழுங்கல் அரிசி- 50 கிராம்
நீர்- 4 டம்ளர்
வெந்தயம்-1/4 தேக்கரண்டி
உள்ளி - 3 பல்லு
சுரைக்காய் சோறு- 50 கிராம்

இவ்வாறு சுரைக்காய்ச்சோற்றை பயன் படுத்தி தயாரிக்கும் கஞ்சி வெப்பகாலங்க ளுக்கு மிகவும் உகந்ததாகவும் சூட்டைத்தணிக்கக் கூடியதாகவும் குளிர்ச்சியைத் தரக்கூடிய தாகவும் காணப்படும். இக்கஞ்சி உடலைத்திடமாகவைத்திருக்கவும் ஏதாவது நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளெடுக்க இலகுவானதா கவும் இலகுவாக சமிபாடடையக்கூடியதாக வும் அகத்துறிஞ்சக் கூடியதாகவும் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

598

## சமயோசித புத்தி

சக்கரவர்த்தி அக்பரின் அரண்மனையில் ஒரு பெரிய விருந்து நடைபெற்றது. ஏராளமான முக்கிய பிரமுகர்கள் அதில் கலந்துகொண்டனர். அக்பரும் பீர்பாலும் அருகருகே அமர்ந்து விருந்துண்டனர். விருந்தில் வித விதமான பண்டங்கள் பரிமாறப்பட்டன.

இருவரும் சுவாரசியமாக உரையாடிக்கொண்டே உண்டனர். இலையில் வைக்கப்பட்டிருந்த பலாப்பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். பலாக் கொட்டைகளை அக்பர் வேடிக்கையாக பீர்பாலின் இலையில் அவருக்குத் தெரியாமல் வைத்துவிட்டார்.

சாப்பிட்டு முடியும் நேரத்தில் அக்பர் பீர்பாலின் இலையைப் பார்த்துவிட்டு பீர்பால் எவ்வளவுதான் உமக்குப் பலாப்பழத்தின் மேல் ஆசை இருந்தாலும் இவ்வளவு பழங்களா உண்பது? என்று கேலியாகக் கூறிச் சிரித்தார்.

குனிந்த இலையைப் பார்த்த பீர்பால் தான் தின்ற பழங்களின் விதைகளையெல்லாம் மன்னர் தன்னுடைய இலையில் வைத்துவிட்டதைக் கண்டுகொண்டார்.

அரசர் பெருமானே! நானாவது பழங்களைத் தின்று விட்டுக் கொட்டையை இலையில் வைத்துவிட்டேன். நீங்கள் பலாக் கொட்டையையும் அல்லவா சேர்த்து தின்றுவிட்டீர்கள். உங்கள் இலையில் கொட்டையே இல்லையே என்று கூறிச் சிரித்தார்.

பீர்பாலுடைய சமயோசிதக் கிண்டலைக் கேட்டு மன்னர் பேருவதை அடைந்தார்.



★★★★★★★★★★★★★★

## அகந்தை

உலகப் பிரசித்தி பெற்ற துறவி ஒருவர் ஒருநாட்டுக்கு விஜயம் செயதார். ஊருக்கு ஒதுக்குப் புறத்தில் ஒருகுடிசை போட்டுத் தங்கி, நாட்டு மக்களுக்கு உபதேசம செய்யத் தொடங்கினார். மக்கள் தங்கள் குறைகளை அவரிடம் சொல்லி, அவரின் ஆசியைப் பெறறுச் செல்லத்தொடங்கினர். அவர சொன்னதெலலாம் நடக்கிறது என்ற செய்தி நாடு முழுவதும் பரவிவிட்டது. இந்த விஷயம் அந்த நாட்டு மன்னனின் காதுக்கு எட்டியது. உடனே, சில முக்கியஸ்தர்களை அழைத்துக் கொண்டு, துறவியின் இருப்பிடத்துக்குச் சென்றார். அப்போது அந்தத் துறவி தன் குடிசையைச் சுற்றி சில மரக் கன்றுகளை நட்டுக்கொண்டிருந்தார். அதனால் மன்னன் வந்திருப்பதை அவர் கவனிக்கவில்லை. உடனே மன்னன், “துறவி மகானே! நான் மன்னன் வந்திருக்கிறேன்!” என்றார். துறவி திரும்பாமல், “போ!” என்று சொல்லிவிட்டு, தன்வேலையைத் தொடர்ந்தார். மன்னனுக்குக் கோபம்வந்தது. "துறவியே! உம்மைத் தேடி நானே வந்திருக்கிறேன். சிறிது கூடமரியாதையே இல்லாமல போ என்கிறீரே!" என்று கத்தினான். துறவி மீண்டும் திரும்பாமல் ,"மறுபடியும் சொல்கிறேன், நீ போகலாம்!" என்றார். மன்னனுக்குக் கோபம் பொங்கியது. அதைக் கண்ட அமைச்சர் அமைதியாக இருக்கும்படி, சைகை காட்டினார். மன்னன் சிரமப்பட்டு, தன்கோபத்தை அடக்கினான். "துறவிமகானே! இப்போது நான் போகிறேன். மறுபடியும் எப்போது நான் வரட்டும்?" என்று கேட்டான் மன்னன். “நான செத்த பிறகு வா! "என்றார் துறவி. அதைக் கேட்டு மன்னன் உள்பட அமைச்சர பிரதானிகள் அனைவரும் திடுக்கிட்டனர். "நீங்கள் செத்த பிறகு வரவா? அப்போது வந்து உங்களை எப்படிப் பார்ப்பது? உங்களிடம் எப்படிப் பேசுவது?" என்று கேட்டான் மன்னன். துறவி இப்போது அவனை ஏறிட்டுப் பார்த்தார். "நான் செத்த பிறகு என்றால், என்மறைவுக்குப்பிறகு என்று அர்த்தமல்ல... நான் குறிப்பிட்ட "நான்" என்பது உன்னுள இருப்பது. உன் அகந்தையை விட்டு, ஒரு சாதாரண மனிதனாக வந்து எனனைப்பார் எனபதுதான் நான் சொன்னதன பொருள்!" என்றார் துறவி. தன் அகந்தையை எண்ணி தலை கவிழ்ந்தான் மன்னன்



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

10.2013
09

- 1003- லெயிஃப் எரிக்சன் கனடாவில் லானஸ் ஒக்ஸ் மெடோஸ் என்ற இடத்தில் தரையிறங்கி, அமெரிக்காவில் காலடி வைத்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்.
- 1604- சுப்பர்நோவா 1604 பால் வெளியில் கண்டு பிடிக்கப்பட்டது.
- 1804- டாஸ்மானியா தலைநகர் ஹோபார்ட் நகரம் அமைக்கப்பட்டது.
- 1820-கயாக்கில் ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1831- கிரேக்கத் தலைவர் இயோனிஸ் கப்பொடீஸ்ட்றியா படுகொலை செய்யப்பட்டார்.
- 1835-கொழும்பு ரோயல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1854- ரஷ்யாவில் செவஸ்தபோல் மீதான தாக்குதலை பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் துருக்கியப்படைகள் ஆரம்பித்தன.
- 1888- வாஷிங்டன் நினைவுச் சின்னம், அக்காலத்தில் உலகின் உயரமான கட்டடம், வாஷிங்டன் டிசியில் பொதுமக்கள் பார்வைக்குத் திறக்கப்பட்டது.
- 1910-மாறுவேடத்தில் உலகப் பயணம் மேற் கொண்ட பின்னர் வ.வே.சு.ஐயர் புதுச்சேரி திரும்பினார்.
- 1943-யூகோஸ்லாவியாவின் மன்னன் முதலாம் அலெக்சாண்டர் கொல்லப்பட்டான்.
- 1941- பனாமாவில் இடம்பெற்ற புரட்சியின் பின்னர் ரிக்கார்டோ டெ லா கார்டியா அதிபரானார்.
- 1962- உகண்டா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1967- சேகுவேரா பொலிவியாவில் கைது செய்யப்பட்ட அடுத்த நாள் புரட்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 1981- பிரான்சில் மரணதண்டனை நிறுத்தப்பட்டது.
- 1989-ரஷ்யாவின் வரோனியொஷ் அருகில் ஒரு பறக்கும் தட்டு இறங்கியதாக சோவியத் ஒன்றிய செய்தித் தாபனம் அறிவித்தது.
- 2001- இந்தியாவில் பாவேந்தர் பாரதிதாசனுக்கு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.
- 2004- ஆப்கானிஸ்தானில் முதற்தடவையான ஜனநாயகத் தேர்தல் இடம்பெற்றது.
- 2006- வடகொரியா தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தியது.

பிறப்புக்கள்

- 1924-இம்மானுவேல் சேகரன், தலித் மக்களின் உரிமைகளுக்காக போராடிய ஒரு தலைவர் (இ.1057)
- 1945- விஜய குமாரணதுங்க, இலங்கையின் சிங்கள் திரைப்பட நடிகர், அரசியல்வாதி (இ1988)

இறப்புக்கள்

- 1943-பீட்டர் சீமன், டச்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1865)
- 1967- சேகுவேரா, ஆர்ஜென்டீனிய கெரில்லாத் தலைவர் (பி.1928)

சிறப்பு நாள்

உலக அஞ்சல் தினம்

### பாரதிதாசன்



1891 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி பாண்டிச்சேரியில் பிறந்த இவர் பெரும்புகழ் படைத்த பாவலர். இவருடைய இயற்பெயர் சுப்புரத்தினம். தமிழாசிரியராக பணியாற்றிய இவர், சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார். பாரதிதாசன் தம் எழுச்சி மிக்க எழுத்தால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் பரவலாக அழைக்கப்படுபவர். இவர் குயில் என்னும் கவிதை வடிவிலான ஒரு திங்கழிதழை நடத்தி வந்தார். இவர் பதினெட்டு வயதிலேயே அரசினர் கல்லூரித் தமிழாசிரியரானார். இசையுணர்வும் நல்லெண்மும் அவருடைய உள்ளத்தில் கவிதையுருவில் காட்சி அளிக்கத் தலைப்பட்டன. அவர் சிறுவயதிலிருந்தே சிறுசிறு பாடல்களை எழுதி தமது தோழர்களுக்கு பாடிக் காட்டுவார்.

நண்பர் ஒருவரின் திருமணத்தின்போது நாட்டுப்பாடல் ஒன்றைப்பாடியே பாரதியாருக்கு அறிமுகமானார்.

தன் நண்பர்கள் முன்னால் பாடு என்று பாரதி கூற, பாரதிதாசன் “எங்கெங்கு காணினும் சக்தியடா” என்று ஆரம்பித்து இரண்டு பாடலைப் பாடினார். இவரின் முதற் பாடல் பாரதியாராலேயே சிறீ சுப்பிரமணிய கவிதா மண்டலத்தைச் சார்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது என்றெழுதப்பட்டு சுதேசமித்திரன் இதழுக்கு அனுப்பப்பட்டது.

புதுவையிலிருந்து வெளியான தமிழ் ஏடுகளில் கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், பாரதிதாசன் என பல புனைப் பெயர்களில் இவர் எழுதி வந்தார்.

இவர் தந்தை பெரியாரின் தீவிரத் தொண்டராகவும் விளங்கினார். திராவிடர் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, மத எதிர்ப்பு போன்றவற்றினை தனது பாடல்கள் மூலம் பதிவு செய்தார்.

1946 ஜூலை 29 இல் அறிஞர் அண்ணா அவர்களால் கவிஞர் புரட்சிக் கவி என்று பாராட்டப்பட்டார்.

பாரதிதாசன் அவர்கள் நகைச்சுவை உணர்வு நிரம்பியர். கவிஞருடைய படைப்பான பிசிராந்தையார் என்ற நாடக நூலுக்கு 1970 இல் சாகித்ய அக்கடமியின் விருது கிடைத்தது. இவருடைய படைப்புக்கள் தமிழ்நாடு அரசினரால் 1990 இல் பொது உடைமையாக்கப்பட்டன.

பாரதிதாசன் “தமிழுக்கு அமுதென்று பேர்–அந்தத்
தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்” என்ற புகழ்பெற்ற வரிகளுக்குச் சொந்தக்காரன்.

1964 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இவர் இயற்கை எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சக்தி மகத்தான சக்தி



## ஆன்மீகம் 02

...சஹஸ்ரஹாரம்: இந்த சக்கரம் பரவச நிலையைத் தரத்தக்கது. எப்பொழுதும் ஒரு விதமான பரவச நிலையிலேயே இருக்கிற தன்மை, சஹஸ்ரஹாரா முழுமையாகத் தூண்டப்பட்டவர்களுக்கு உரியது. இவர்களுக்கு உணவு ஊட்டுதல், தூய்மை செய்தல், உடை உடுத்துதல் போனற்வற்றை மற்றவர்கள்தான் செய்ய வேண்டும். இதனால் இவர்கள் அவதூதர்கள் என்று அழைக்கப் படுகின்றனர்.

இந்த ஏழு சக்கரங்களும், வாழ்வின் ஏழு விதமான தீவிரத் தன்மைகள், பெரும்பான்மையான மக்கள் மூலாதாரத்திற்கும் மணிபூரகத்திற்கும் நடு இல் சக்தி நிலை தூண்டப்பட்டு வாழ்ந்து முடிக்கிறார்கள். சிலருக்கு மட்டுமே அநாகதம் வரையில் அந்த ஆற்றல் தூண்டப்படுகிறது.

வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு விதமாய் சக்தி நிலை உயரும். ஆக்ஞாவிலிருந்து சஹஸ்ரஹாரா நோக்கி சக்தி நகர்வதற்கென்று மறு மையத்திற்கு குதிக்கிற சூழ்நிலைதான் அங்கே. அதற்குத்தான் ஒரு குருவின் பூரணமான அருளும் துணையும் தேவைப் படுகிறது. அதற்கு அளப்பரிய நம்பிக்கை வேண்டும். பல்வேறு பிறவிகளுக்குப் பிறகும் நம்பிக்கை வைக்காததாலேயே இந்த வாய்ப்பை பலரும் இழக்கின்றனர்.

ஆக்ஞாவைத் தொட்டவர்கள் அந்த எல்லையிலேயே நின்று விடுகின்றனர். அடுத்த சக்கரம் நோக்கித் தூண்டிச் செல்வதற்கு மிகுந்த நம்பிக்கையும் அர்ப்பணிப்புணர்வும் தேவை. இராமகிருஷ்ணரின் வாழ்வில் அது நிகழ்ந்தது. காளியிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்த அவர், அவ்வப்போது சில சமாதி நிலைகளை அடைவார். அப்பொழுதெல்லாம் காளியிடம் பேசுவதாக காளிக்கு உணவு தருவதாக உணர்வார்.

சமாதி நிலை கடந்து வெளிவந்ததும் காளியைத் தேடி சிறு குழந்தை போல் அழுவார். ஆக்ஞாவை எட்டியிருந்த அவர் அதைத் தாண்டிச் செல்லவிரும்பவில்லை. அப்போது தான் தோத்தாபுரி என்கிற ஞானி இராமகிருஷ்ணரைக் கண்டார். முழுமையான வளர்ச்சிக்குரியவர் ஒரு எல்லையிலேயே தேங்கி நிற்பது கண்டு அவரிடம் நிறையப் பேசிப் பார்த்தார்.



இராமகிருஷ்ணர் ஒப்புக்கொள்ளவில்லை. தோத்தாபுரி, அருகிலிருந்த ஒரு கண்ணாடித் துண்டை எடுத்து, இராமகிருஷ்ணரின் ஆக்ஞாவில் அழுந்தக் கிழித்தார். உடனே முற்றிலும் புதிய எல்லையைத் தொட்ட இராமகிருஷ்ணர், பரமஹம்ஸர் ஆனார்.

சக்கரங்களைத் தூண்டுவதென்பது மிகவும் நுட்பமான ஒன்று. ஞானிகளாலேயே அது சாத்தியம். அடிப்படை சக்தி நிலையோடு விளையாடுவதால் அதனை எல்லோரும் செய்துவிட இயலாது. குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் சக்கரங்களைத் தூண்டுவது தொடர்பான ஏமாற்று வேலை ஏராளமாக நடைபெறுகிறது. குண்டலினியை எழுப்புவது பற்றியும் நிறைய புத்தகங்கள் வந்துவிட்டன.

ஆத்ம சாதனைகளை, ஆன்மீகப் பயிற்சிகளை இடையறாமல் செய்து வந்தாலே சக்தி நிலை இயல்பாக மேலெழும்பும். ஆன்மீப் பயிற்சிகள் உரிய முதிர்ச்சி அடையும்போது சக்திநிலை மேலெழும்புமே தவிர, சக்கரங்களைத் தனித்தனியாகத் தூண்டுவதும் நல்லதல்ல.

ஏழு நிலையிலும் தீவிரத் தன்மை கொண்ட நமது சக்திநிலை தூண்டப் படும்போது மனிதன் தன் அளப்பரிய ஆற்றலை உணர்கிறான். அதற்குப் பிராணாயாமம் போன்ற முறையான பயிற்சிகளே வழி.

மனித சக்தி என்பது தனக்குள் இருக்கும் அருட்பேராற்றல், அதனை உணர்வதன் மூலம் ஒரு மனிதனால் தன்னையே உணர இயலும். தன்னை உணர வேண்டுமானால் உலகியல் வாழ்க்கையில் இருந்துவிடுபட்டாக வேண்டுமா? இந்தக் கேள்வியைப் பலரும் கேட்கிறார்கள். (தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# 1901-1976 வரை பறிபோனது, 15 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் நிலம்

# 1976- 2009 வரை ஒரு அங்குலம்கூட பறிக்கப்படவில்லை

**தமிழர் தாயகக் கோட்பாடு, விடுதலைப் புலிகளின் போராட்டம், தேசியத் தலைவரால் பாதுகாக்கப்பட்ட தமிழீழ தேசம், சிங்களவர்களின் நில ஆக்கிரமிப்பு, 13-வது அரசியல் சட்டதிருத்தம், மாகாணசபைத் தேர்தல் எனச் சமகால நிலவரங்கள் தொடர்பான பல்வேறு கருத்துக்களை, எதிர்ப்புக்களை கவிஞர் காசி ஆனந்தன் பதிவு செய்திருக்கின்றார் தமிழ்நெட் இணையத் தளத்திற்கு அண்மையில் அவர் வழங்கிய செவ்வி எழுத்துவடிவில்...**

கேள்வி:- வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடம் என்று மட்டுமே இந்திய- இலங்கை ஒப்பந்தம் பேசுகிறது. பாரம்பரியத் தாயகம் என்று அது கூறவில்லை. தவிரவும், வடக்கோடு நிரந்தரமாக இணைந்திருப்பதா என்பதை கிழக்கு மட்டுமே பொது வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கும் என்று தமிழர் தாயகக் கோட்பாட்டை நிராகரிக்கும் பொறிமுறையை இந்த இந்திய- இலங்கை ஒப்பந்தம் கொண்டிருக்கிறது. கிழக்கு மாகாண நிலைமையை நன்கு அறிந்தவர் என்ற நிலையில் இது குறித்து தாங்கள் கருத்தைப் பதிவு செய்வீர்களா?

பதில்:- தமிழர் தாயகத்தில் (தமிழீழத்தில்) வடக்கையும், கிழக்கையும் பிரிக்கின்ற முயற்சி வெள்ளைக்காரன் வெளியேறிய அன்றே தொடங்கியது என்பதுதான் உண்மை. நமக்கு தெரியவேண்டும் கிளகன் அறிக்கையிலும் சரி அதற்குப் பின்பு வந்த 1833 இல் கால் புரூட் வெளியிட்ட அறிக்கையிலும் சரி தமிழர்களின் தாயகமாக இந்த வடக்கு- கிழக்கு நிலப்பகுதி குறிப்பிடப்படுகிறது.

ஒரே நிலமாகத்தான் சொல்கிறார்கள். அவர்களுடைய கருத்தில் அந்தப் பகுதி Traditional homeland of the tamils. அது தமிழர்களுடைய பழைய தாயகம் என்றுதான் இருந்தது. அந்த வடக்கு- கிழக்கு பகுதியை துண்டாடி முதலில் தமிழர் தாயகத்தை வடக்கு- கிழக்கு என்று பிரிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான், 1901 இல் மாகாணப்பிரிவினை ஏறப்பட்டபோது ஏழு மாகாணங்களைச் சிங்களவர்களுக்கு கொடுத்துவிட்டு தமிழர்களுக்கு இரண்டு மாகாணங்கள் என்று சொல்லி ஒரே மாகாணமாக அமைக்காமல் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் என்று தமிழர் தாயகத்தைப் பிரித்தே மாகாணங்களை அமைத்தார்கள். அப்பொழுது, பிரிட்டிஷ்காரர்களுடைய ஆட்சி இருந்தாலும் 1901 இல் சிங்கள ஆட்சியில் இருந்த நரிகள் வெள்ளைக்காரர்களை வளைத்து இப்படியான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அது நிறைவேறிற்று.

வடக்கு மாகாணம்- கிழக்கு மாகாணம் என்று தமிழர் தாயகம் பிரிக்கப்பட்டது. அப்படிப் பிரிக்கப்பட்ட பிறகும் அந்தத் தாயகத்தை மேலும் உடைத்து சிங்களமயமாக்கும் முயற்சியில் வெள்ளைக்காரர்கள் வெளியேறிய 48 இல் இருந்தே சிங்களவர்கள் இறங்கிவிட்டார்கள். சிங்களவர்கள் கிழக்குப் பகுதிகளில்தான் முதலில் பெரிய அளவில் குடியேற்றங்களைத் தொடங்கினார்கள். அல்லை, கந்தளாய், கல்லோயா, அம்பாறை ஆகிய பகுதிகளில் திட்டமிட்டுச் சிங்களவர்களைக் குடியேற்றி அங்கு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகிற அளவிற்கு அந்த மண்ணை அவர்கள் பறித்தெடுத்தனர்.

தமிழர்களின் தாயகம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் பறித்தெடுக்கப்பட்டது. நான் இந்த இடத்தில் பழைய புள்ளிவிவரங்களோடு வரலாற்றைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

கால்புருக், தனது அறிக்கையில் தமிழர்களுடைய தாயகம் 26,500 சதுரகிலோ மீற்றர் என்று சொல்லுகிறார். காலம் ஓடுகிறது. அதற்குப் பிறகு 1901 இல் வடக்கு- கிழக்கு மாகாணங்களை தமிழர்களுக்கு என்று ஒதுக்கிய பிறகு ஏழு மாகாணங்களைச் சிங்களவர்களுக்கு என்று ஒதுக்கிய நேரத்தில் வடக்கு- கிழக்கை ஒட்டிய தமிழர்களுடைய பல இடங்களை, இந்த மாகாணங்களில் உள்ள இடங்களை, தமிழர் தாயகத்தில் உள்ள நிலங்களை, அவர்கள் சிங்களவர்களுடைய மாகாணங்களுடன் இணைத்தார்கள். புத்தளம், சிலாபம் போன்ற பகுதிகள் எல்லாம் அப்படித்தர் பறிபோயிற்று. அவையெல்லாம் ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் நிலமல்ல. சுமார் 7500 சதுர கிலோ மீற்றர் தமிழர் நிலம்.

1901 இல் மாகாணப்பிரிவினையின் போது சிங்கள மாகாணங்களுடன் சேர்க்கப்பட்டது. அப்போது நம்முடைய 26,500 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் 7500 சதுர கிலோமீற்றர் பரப்பளவு நிலத்தை நாம் இழந்துவிட்டோம். நம்முடைய தாயகத்தில் 1948 இல் பிரிட்டிஷ்காரர்கள் வெளியேறிய பிறகு தந்தை செல்வா சிங்களவர்களைக் குடியேற்றாதே. குடியேற்றாதே என்று போராட்டத்தை 27 ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். 1976 வரை சிங்களவர்களை குடியேற்றுவதை நிறுத்தவில்லை சிங்கள அரசுகள். தொடர்ந்து சிங்களவர் குடியேற்றம் நடப்பதைத் தாங்க முடியாமல் தந்தை செல்வா வட்டுக்கோட்டையில் இவர்களோடு வாழவே முடியாது; தமிழர் தாயகத்திற்குக் காப்பு தனித்தமிழீழம்தான் என்று தீர்மானத்தை நிறைவேற்றினார். அந்த 1976 தீர்மானம் போடுகிறவரை 48 இல் இருந்து 27 ஆண்டுகள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் மேலும் 7500 ச.கி.மீ. நிலப்பரப்பு- அல்லை, கந்தளாய், அம்பாறை என 7500 ச.கி.மீ பரப்பை நாம் இழந்தோம்.

ஆகவே, 1976 இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றுகின்ற நேரத்தில், நம்முடைய நிலப்பரப்பில்- 1833 இல் கால்புருக் சொன்ன 26,500 ச.கி.மீ பரப்பில் 1901 இல் மாகாணப்பிரிவினையின் போது 7500 ச.கி.மீ. நிலப்பரப்பை பறிகொடுத்து, 1948க்கும் 1976 க்கும் இடையில் 27 ஆண்டுகள் மேலும் 7500 ச.கி.மீ பரப்பைச் சிங்கள் குடியேற்றத்தினால், பறிகொடுத்து நாம் 15,000 ச.கி.மீ நிரப்பரப்பு நமது தாயகத்தில் இழந்து, சுருங்கிப்போய் நிற்கிறோம். 26,500 ச.கி.மீ பரப்பில் 15,000 ச.கி.மீ பரப்பு என்பது பாதிக்கு மேல் ஆகும். நம் தாயகத்தில் பாதிக்கு மேல் இழந்த பிறகு 11,500 ச.கி.மீ நிலப்பரப்பில் நின்றுதான் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் ஆயுதப்



போராட்டத்தைத் தொடக்கினார். நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது- 1976 தொடக்கம் 2009 வரை அந்த 33 ஆண்டு காலத்தில் தமிழர் தாயகத்தில் ஒரு அங்குலம் மண்ணைக் கூட நாம் இழக்கவில்லை. ஆயுதம் தான் நம்மைக் காப்பாற்றியது. நாம் மறந்துவிடக்கூடாது, பிரபாகரனின் தலைமைதான் நம்மைக்காப்பாற்றியது. நாம் மறந்துவிடக் கூடாது, விடுதலைப்புலிகளின் போராட்டம் தான் மாவீரர்களின் ஈகம்தான் நம்மைக் காப்பாற்றியது.

ஆகவே, நாம் நம்முடைய மண்ணை மிகப்பெரிய அளவில் இழந்து சுருங்கி, நின்று போராடுகிறோம். இந்த நேரத்தில் கிழக்கு மாகாணத்தை வடக்கில் இருந்து பிரிக்கும் நோக்கோடு இந்த 13-வது திருத்தச்சட்டத்தில் சொல்லப்படுகின்ற கடுமையான கருத்து என்னவென்றால், அல்லது சட்டதிருத்தம் என்னவென்றால், அவர்கள் சொல்லுகிறார்கள் வடக்கோடு நிரந்தரமாக இணைந்திருப்பதா என்பதைக் கிழக்குதான் பொதுவாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கவேண்டுமாம். நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கிழக்கு மக்கள் தனியாக வாக்களித்து நாங்கள் தனியாக வடக்கோடு சேர மாட்டோம் என்று முடிவெடுத்தால் தமிழர் தாயகம் இரண்டாக உடையும். இது கொடுமையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர பதிவாளரை நியமிக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

**முல்லை.மாவட்ட கரிக்கட்டுமூலை வடக்கு, கற்சிலைமடு ஆகிய பிரதேசங்களுக்கு திருமணம், பிறப்பு, இறப்பு ஆகியவற்றிற்கு நிரந்தர பதிவாளர் நியமிக்கப்படவில்லை.**

இதில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கரிக்கட்டுமூலை வடக்கு பிரதேசத்தில் சிலாவத்தை, சிலாவத்தை தெற்கு, முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, அம்பலவன் பொக்கணை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள 27 கிராமங்களில் ஆயிரத்து 665 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் பின்னர் பிறப்பு, இறப்பு, திருமணம் ஆகியவற்றிற்கு நிரந்தர பதிவாளர் நியமிக்கப்படவில்லை.

அத்துடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கற்சிலைமடு பிரதேசத்தில் ஒட்டுசுட்டான், முத்துவிநாயகபுரம், பேராறு, கற்சிலைமடு, வித்தியாபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் 13 கிராமங்களில் ஆயிரத்து 231 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் கடந்த ஜூலை மாதத்தில் இருந்து பிறப்பு, இறப்பு , திருமணம் என்பவற்றைப் பதிவு செய்ய நிரந்தர பதிவாளர் இல்லை.

எனவே, நிரந்தர பதிவாளர் நியமிக்கப்படாமையால் பெரும் சிரமங்களை அம் மக்கள் எதிர்கொள்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்குறித்த பிரதேசங்களில் நிரந்தர பதிவாளரை நியமித்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லை.மாவட்ட கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு ஆகிய கிராமங்களில் கசிப்பு உற்பத்தி அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்டு 450 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இக்கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமங்களில் ஆறுமாதங்களாக கசிப்பு உற்பத்தி அதிகரித்து காணப்படுகின்றது.

இக்கிராமங்களில் நூறிற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள்






உள்ள நிலையில், இங்கு கசிப்பு உற்பத்தி அதிகரித்து காணப்படுவதால் இளம் தலைமுறையினர் கலாசார சீரழிவுகளுக்குட்படுகின்றனர். இரசாயன பதார்த்தங்களைப் பயன்படுத்தியே இக் கசிப்பு உற்பத்தி இடம்பெறுகின்றது. உரியவர்களிடம் இது தொடர்பாக அப் பகுதி மக்கள் முன்னதாக முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் மீண்டும் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (ம-267)





வவுனியா வேப்பங்குளம் இந்து அன்பகத்தின் சிறுவர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா உரையாற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டசெய்தியாளர்)

# ஆவணங்களை பெறுவதற்கான விழிப்புணர்வு செயலமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் நலன் கருதி U.N.H.C.R. நிதி அனுசரணையுடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தால் மக்களுக்கான குடியியல் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கான விழிப்புணர்வு செயலமர்வு நடைபெறவுள்ளது.

இதன்படி முள்ளியவளை மேற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு நாளை வியாழக்கிழமையும் முள்ளியவளை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு எதிர்வரும் 14 ஆம் திகதியும் அவரவர் கிராம சேவை அலுவலகங்களில் இவ் விழிப்புணர்வு செயலமர்வு இடம்பெறவுள்ளது.

முள்ளியவளை வடக்கு, புதறிகுடா ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் உள்ள மக்களுக்கு புதறிகுடா கிராம அலுவலர் அலுவலகத்திலும் செல்வபுரம், மணற்குடியிருப்பு ஆகிய கிராமசேவையாளர் பிரிவில் உள்ள மக்களுக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி செல்வபுரம் கிராம அலுவலர் அலுவலகத்திலும் இது இடம்பெறவுள்ளது.

தண்ணீரூற்று கிழக்கு, தண்ணீரூற்று மேற்கு ஆகிய கிராம மக்களுக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி தண்ணீரூற்று மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும் குமுழமுனை கிழக்கு, குமுழமுனை மேற்கு, குமுழமுனை மத்தி, தண்ணிமுறிப்பு ஆகிய கிராமங்களுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி குமுழமுனை மத்தி பொது நோக்கு மண்டபத்திலும் கணுக்கேணி கிழக்கு, கணுக்கேணி மேற்கு ஆகிய கிராம மக்களுக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி கணுக் கேணி கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்திலும் கருத்தரங்கு இடம்பெறும்.

இச் செயலமர்வில் காலங் கடந்த பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ் என்பவற்றை எவ்வாறு பெற்றுக் கொள்ளமுடியுமென விளக்கமளிக்கப்படவுள்ளதால் தவறாது கலந்து கொண்டு பயனடையுமாறும் கரைதுறைப்பற்று உதவி பிரதேச செயலர் இ.குருபரன் அறிவித்துள்ளார். (ம-267)

# முதியோர் ஆசனங்களுக்கான ஸ்ரிக்கர் ஒட்டுதல்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட முதியோர் தின விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக அரச மற்றும் தனியார் பேருந்து வண்டிகளில் ஸ்ரிக்கர்கள் ஒட்டும் நிகழ்ச்சி வவுனியா பேருந்து நிலையத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் வவுனியா மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான உயர்திரு எம்.கே.பந்துல ஹரிச்சந்திர, வவுனியா நகர பிரதேச செயலாளர் கே.உதயராஜா, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அதிபர் எம்.எஸ். பத்மநாதன், வவுனியா வர்த்தக சங்க தலைவர் ரி.கே. இராஜலிங்கம், UNHCR நிறுவனத்தின் சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பத்மினி பாலச்சந்திரன், இலங்கை போக்குவரத்து சபை சாலை முகாமையாளர் சந்திரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ள உள்ளனர்.

மேலும் சமூக சேவை உத்தியோகத்தர்கள், முதியோர் மேம்பாட்டு உத்தியோக்கத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இவ்விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-250)

# கண்னி கூடத்திற்கு மின் இணைப்பு வழங்குக

(பூநகரி)

பூநகரி மகாவித்தியாலயத்தில் பல மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட கணனி கூடம் பல கணனித் தொகுதிகளைக் கொண்டிருந்தும் மின் இணைப்புச் செய்து கொடுக்கப்படாமையால், மாணவர்களின் பயன்பாட்டுக்கு அது பூரணமாக பயன்படவில்லை என பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒப்பந்தப்படி மின்னிணைப்பைப் பொருத்தி ஆய்வு கூடத்தை இயங்கச் செய்யாத நிலையில் க.பொ.த.(சா/தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைவார்கள். சம்பந்தப்பட்டவர்கள் துரித நடவடிக்கை எடுத்து மின் இணைப்பை செய்து கொடுக்க வேண்டுமென பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.(ம-84)

# "வளை ஓசை" நூலுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(புளியம்பொக்கணை)

கண்டாவளை பிரதேச செயலக கலாசார பேரவையினால் இவ்வருடம் நடத்தப்படவுள்ள கலாசார விழாவில் வெளியிடப்படவுள்ள **வளை ஓசை** நூல் வெளியீட்டுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அனைவரும் இந் நூலுக்கான ஆக்கங்களை அனுப்ப முடியும். பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான கவிதை, கட்டுரை மற்றும் அக்கிராம ஆலய வரலாறு தொடர்பான ஆக்கங்களை அனுப்புதல் வேண்டும்.

இவ் ஆக்கங்களை கலாசார பேரவை, பிரதேச செயலகம், கண்டாவளை என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். (ம-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் தியாகு கைதானமைக்கு நாம் தமிழர் கட்சி கண்டனம்

(சென்னை)

**இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை நடத்தக் கூடாது என எதிர்ப்புத் தெரிவித்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய தோழர் தியாகு கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டமைக்கு நாம் தமிழர் கட்சி கண்டனத்தை வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பில் அக்கட்சி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது, அதில் இந்தியா பங்கேற்கக் கூடாது உள்ளிட்ட 9 கோரிக்கைகளை வலியுறுத்தி வெற்றி அல்லது வீரச்சாவு எனும் முழக்கத்துடன் இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் எதிர்ப்பியக்கம் சார்பில் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வந்த தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதை நாம் தமிழர் கட்சி வன்மையாக கண்டிக்கின்றது.

தொடர்ந்து 7 நாட்கள் நடைபெற்று வந்த உண்ணாவிரதத்திற்கு தமிழக அரசு சார்பில் வந்த மருத்துவர் குழுவினர் தியாகுவின் உடல் நிலையைச் சோதித்த பின்னர் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டுமென கூறப்பட்டது.

இதனையடுத்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாலும் சிறையில் அடைக்கப்பட்டாலும் உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என அறிவித்திருக்கின்றார்.

மாநில அரசாங்கமோ மத்திய அரசாங்கமோ உண்ணாவிரதப் போராட்டத்தின் கோரிக்கைக்கு எவ்வித பதிலும் தராது அதைப் பற்றிய எவ்வித கருத்தும் கூறாது எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தாது அவரைக் கைது செய்திருப்பது உச்சக் கட்ட அடக்குமுறையாகும்.

கூடங்குளம் தொடங்கி இன்றைய தோழர் தியாகுவின் கைது வரை ஜனநாயக வழியிலான போராட்டங்களுக்கு எதிராக அரசுகள் எடுத்து வரும் நடவடிக்கை போராடுபவர்களின் கோரிக்கையைக் காதுகொடுத்து கேட்க கூடத் தயாரில்லை என்பதையே காட்டுகிறது. ஜனநாயக விழுமியங்களை மீறி அரசுகளே செயற்படுவது மிக வேதனையானது.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களைக் கருத்தில் கொண்டு அங்கே நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்றும் மாநாட்டை இலங்கையில் நடத்த முடிபு செய்த அமைப்புக்களுக்கு நிதி உதவிகளை நிறுத்தப் போவதாகவும் கனடா நாட்டின் பிரதம மந்திரி ஸ்டீபன் ஹார்பர் அறிவித்துள்ள நிலையில், 6 கோடி தமிழ் மக்களைத் தன்னகத்தே கொண்ட இந்திய திருநாடு இலங்கையில் குறித்த மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்ற தமிழர்களின் கோரிக்கைக்கு இதுவரை எந்தப் பதிலும் சொல்லாது இருப்பது இவ்வரசு எந்த அளவுக்குத் தமிழர்களை மதிக்கிறதென்பதைக் காட்டுகிறது.

ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் தொப்புள்கொடி உறவுகளை இழந்து தவிக்கும் அவர்களின் படுகொலைக்கு நீதி கேட்டு நிற்கும் ஒட்டுமொத்த தமிழினத்தின் கோரிக்கையாக தியாகுவின் கோரிக்கை அமைந்துள்ளது.

நியாயமிக்க இக்கோரிக்கையை மதிக்காது இந்திய காங்கிரஸ் அரசாங்கமும் கட்சிகளும் செயற்பட்டால் அதற்கான எதிர்வினையை மக்கள் ஏற்படுத்துவர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## பிரதி பொலிஸ்மா அதிபர்கள் நால்வருக்கு திடீர் இடமாற்றம்

நான்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிழக்கு மாகாணம், புத்தளம், குருணாகல் ஆகிய பிரதேசங்களுக்கு பொறுப்பாக கடமையாற்றிய அதிகாரிகளே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டவர்களாவர்.

இதற்கமைய, கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராக பூஜித் ஜயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார். புத்தளம் மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கித்சிறி கனேகம, யாழ்ப்பாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குருணாகல் பிரதேசத்திற்குப் பொறுப்பாகவிருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் சரத் குமார புத்தளம் பிரதேசத்தையும் கண்காணிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு பொறுப்பாகவிருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரட்ன கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

என்ன காரணத்திற்காக இந்த அவசர இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டது என்பது அறிவிக்கப்படவில்லை. (அ-2)

## வடக்குத் தேர்தல் கண்காணிப்பு தொடர்பில் முறையிடுவேன்

### அமைச்சர் சுசில் கொதிப்பு

வடமாகாண சபைத் தேர்தலின் போது சில கண்காணிப்பாளர்களின் நடவடிக்கைகள் குறித்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி வடமாகாண சபைத் தேர்தல் நடைபெற்றது.

தேர்தல் காலத்தில் சில கண்காணிப்பாளர்கள் பக்கச்சார்பாக செயற்பட்டனர் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடம் முறைப்பாடு செய்யவுள்ளேன்.

வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடிந்த போதிலும் சில உள்நாட்டு கண்காணிப்பாளர்கள் பக்கச்சார்பாக செயற்பட்டுள்ளனர்.

தேர்தல் கண்காணிப்பாளர்களின் நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தயாரித்து அதனை தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்கவுள்ளேன். வடக்கில் என்ன நடந்தது என்பதனை கண்டும் காணாதது போல் சில கண்காணிப்பு நிறுவனங்கள் செயற்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்கு புலம்பெயர் தமிழர்கள் இரகசியமாக உழைத்தனர். குறுஞ் செய்திகளை அதிகளவில் பயன்படுத்தி வாக்காளர்களை கூட்டமைப்பினர் திசை திருப்பினர்.

படையினர் வடக்குத் தேர்தல்களில் தலையீடு செய்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை எனவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான வெற்றியை பொறுத்துக் கொள்ள முடியாத தரப்பினர் இவ்வாறு போலிப் பிரசாரங்களை செய்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)



ஹற்றன் நஷனல் வங்கி நெல்லியடிக்கிளையின் 9 ஆம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் வங்கியில் கொண்டாடப்பட்ட போது... (படம்:-தும்பளைச் செய்தியாளர்)

## நல்லாட்சிக்காக குரல் கொடுப்பேன்

### பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

மூன்று வேளை உணவை உட்கொள்ள முடியாமல் பொருளாதார பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கான சிறந்த நாட்டை கட்டியெழுப்பவும் இன,மத, பேத மற்ற நல்லாட்சிக்காகவும் தொடர்ந்தும் குரல் கொடுக்க போவதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு இராஜகிரியவிலுள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கு கட்சியின் சார்பில் தெரிவான உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் எடுக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயகக் கட்சி பதிவு செய்யப்பட்டு குறுகிய காலத்தில் தீப்பந்தம் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டது.

தேர்தலில் 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்று ஜனநாயகக் கட்சி மூன்றாவது அரசியல் சக்தியாக உருவெடுத்துள்ளது.

மோசடிகள் நிறைந்து காணப்பட்ட தேர்தலில் ஜனநாயகக் கட்சி பெற்ற வெற்றி மிகவும் சிறப்பானதாகும்.

ஜனநாயகக் கட்சியின் சார்பில் மாகாண சபைகளுக்கு தெரிவான உறுப்பினர்கள் மக்களுக்கு சேவையாற்றுவார்கள். அவர்கள் அணி மாறி செல்ல மாட்டார்கள் என்றார். (அ-2)

## எதிர்க்கட்சி தலைவராக இருக்கும் அதிர்ஷ்டம் ரணிலுக்கே உண்டு

### அமைச்சர் ஜனக பண்டார தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருவதால் அவர் நீண்ட காலத்துக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்க அதிர்ஷ்டம் கிடைக்கட்டும் என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

தம்புள்ளயில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகள் மாத்தறையில் நடைபெற்ற சம்பவத்தின் மூலம் மிகவும் தெளிவாக வெளியில் தெரியவந்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ளகமாக காணப்பட்ட மோதல்கள் தற்பொழுது வெளியரங்கில் நடக்க ஆரம்பித்துள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு மீண்டும் எழுந்து நிற்க முடியாத நிலைமை உருவாகியுள்ளது. எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே இருக்க வேண்டும்.

அவரை தவிர அந்த பதவிக்கு பொருத்தமான எவரும் அந்த கட்சியில் இல்லை. ரணில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்பட்டு வருகிறார். இதனால் சதாகாலமும் அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்க அதிர்ஷ்டம் கிடைக்கட்டும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைக்குறைப்பா? படைவிலகலா? எதற்கும் தயாரில்லாத அரசாங்கம்

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜ பக்சவிடம் அல் ஜசீரா தொலைக்காட்சி, பேட்டி ஒன்றை எடுத்து ஒளிபரப்பியிருந்தது.

அந்தப் பேட்டியின் ஒரு கட்டத்தில் வடமாகாண சபையின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள விக்னேஸ்வரனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடக்கிலிருந்து இராணுவத்தினரை விலக்கிக்கொள்ள வேண்டுமென்று விடுத்துள்ள கோரிக்கை குறித்து, கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒருபோதும் வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற முடியாது என்றும் ஏனைய மாகாணசபைகளும் இதே கோரிக்கையை முன்வைத்தால் இராணுவத்தை நான் எங்கே நிறுத்த முடியும் என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

வடமாகாண சபைத் தேர்தலின் போதும் தேர்தலுக்குப் பின்னரும் இராணுவத் தலையீடு தொடர்பான விவகாரம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தேர்தல் பிரசாரங்களின்போது வடமாகாண சபையின் முதலமைச்சர் சீ.வி.விக்கினேஸ்வரன் தாம் ஆட்சிக்கு வந்தால் வடக்கில் இராணுவத் தலையீடுகளை குறைப்பது குறித்து பேசுவோம்; அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

வடக்கில் அதிகளவிலான இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள சூழலில் இராணுவத்தை முற்றாக விலக்குவது, இராணுவத்தைக் குறைப்பது என்று இரண்டு முக்கிய விவகாரங்கள் உள்ளன.


இந்த இரண்டுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை விளங்கிக் கொள்ளாத பலர் இதற்குள் குழப்பத்தை ஏற்படுத்த முனைகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராணுவத்தை முற்றாக வெளியேற்றும் கோரிக்கையை முன்வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

ஏனென்றால், அது சில சிக்கலானதும் நடைமுறைச் சாத்தியமற்றதுமான கோரிக்கை என்பதை எவரும் இலகுவில் விளங்கிக் கொள்ளலாம்.

வடக்கு மட்டுமன்றி எந்தவொரு பகுதியிலிருந்தும் இராணுவத்தை அகற்றும் முடிவுகளை இலங்கை அரசாங்கம் ஒருபோதும் எடுக்காது. வடக்கில் போருக்கு முன்னரும் கூட இராணுவ முகாம்கள் செயற்பட்டன.

பலாலி, தொண்டைமானாறு, ஆனையிறவு, நாவற்குழி, குருநகர், காரைநகர் போன்ற இடங்களில் போருக்கு முன்னரும் இராணுவ முகாம்கள் இயங்கிவந்தன. பின்னர், ஒரு கட்டத்தில் இந்த முகாம்களில் சில கைவிடப்பட்டன. வேறுசில புதிதாக அமைக்கப்பட்டன.

1989-ல் பிரேமதாச அரசாங்கத்துடன் விடுதலைப்புலிகள் நடத்திய பேச்சுக்களின்போது, வல்வெட்டித்துறை மொண்டைமானாறு பருத்தித்துறை நாவற்குழி போன்ற முகாம்களை மூடுவதற்கு முடிவு



எடுக்கப்பட்டது. இதன் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பலாலிப் பெருந்தளம் மட்டுமே எஞ்சியிருந்தது.

அதுபோல காரைநகர் கடற்படைத் தளமும் ஆனையிறவுத் தளமும் கிழக்கிலும் மேற்கிலும் தனித்து விடப்பட்ட நிலையில் இருந்தன.

பிற்காலத்தில் விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தின் மீதான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு இந்தப் படை விலக்கம் மிகவும் சாதகமாக மாறியது.

இலங்கை இராணுவம் தனது வரலாற்றில் செய்த மிகப்பெரிய தவறாக இந்தப் படைவிலக்கத்தை இராணுவ அதிகாரிகள் பலரும் குறிப்பிடுகின்றனர்.

இதனால்தான், 1995 சந்திரிகா அரசாங்கத்துடன் பேச்சு நடத்திய போது, விடுதலைப்புலிகள் முன்வைத்த பூநகரித் தளத்தை விலக்கிக் கொள்ளும் கோரிக்கை அடியோடு நிராகரிக்கப்பட்டது. பூநகரிப் படைத் தளத்தை விலக்கிக் கொண்டால் யாழ்ப்பாணம் மீதான முற்றுகை வலுவிழந்துவிடும் என்பதாலேயே சந்திரிகா அரசாங்கம் இறுக்கமான போக்கை காட்டியது.

அதுவே, மூன்றாவது கட்ட ஈழப்போருக்கான அடித்தளமாக மாறியது. இவையெல்லாம் போர் நடந்த சூழலில் நிகழ்ந்ததும், மறுக்கப்பட்டதுமான படை விலக்கங்கள். ஆனால், இப்போது போர் இல்லை. போரை நடத்திய விடுதலைப்புலிகள் அமைப்பும் இல்லை. தமிழர் தரப்பில் யாரிடமும் ஆயுதமும் இல்லை.

ஆனாலும், வடக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தைக் குறைப்பதற்குக் கூட அரசாங்கம் தயாராக இல்லை.

பாதுகாப்பு அச்சுறுத்தல் இன்னமும் இருக்கிறாதா என்றால் இல்லை என்கிறது அரசாங்கம். மீண்டும் விடுதலைப்புலிகளின் கிளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளதா? என்று கேட்டாலும் அறவே கிடையாது என்கிறது.

ஆனாலும், இராணுவத்தை மட்டும் குறைப்பதற்குத் தயாராக இல்லை.

நாட்டின் ஏனைய பகுதிகளைப் போலவே தான் வடக்கிலும், கிழக்கிலும் இராணவத்தினர் நிலைகொண்டுள்ளனராம் -இவர்கள் சுமார் இரண்டு இலட்சம் பேராகும்.

இதில் யாழ் மாவட்டத்தில் இராணுவம் மட்டும் 51, 52, 55 என்று மூன்று டிவிஷன்களை வைத்துக்கொண்டு வெறும் 13,200படையினர்தான் தற்போது நிலைகொண்டுள்ளனர் என்று நம்பச் சொல்கிறது அரசாங்கம்.

இராணுவத்தின் ஒரு கொம்பனியில், ஒரு பற்றாலியனில், ஒரு பிரிகேட்டில், ஒரு டிவிஷனில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற விபரங்கள் தெரியாதவர்கள் வேண்டுமானால், இதனை உண்மை என்று ஏற்கலாம்.

வடக்கில் படைக்குறைப்பு பற்றிய கேள்விகள் எழுகின்றபோதெல்லாம், 40ஆயிரமாக இருந்த படையினரின் எண்ணிக்கையை 13,200 ஆகக் குறைத்துவிட்டோம் என்று அரசாங்கம் கூறுகிறதே தவிர, வடக்கின் எஞ்சிய பகுதிகளைப் பற்றி எதையும் கூறுவதில்லை.

ஏனென்றால் வன்னியில் இராணுவத்தின் மூன்று தலைமையகங்களும் 21,54,56,57,59,61,62,64,65,66 எனக் குறைந்தது 10 டிவிஷன்களும் நிலைகொண்டுள்ளன. அரசாங்கம் நினைத்தால், வடக்கில் படைக்குறைப்பைச் செய்வது ஒன்றும் கடினமான காரியமில்லை.

ஏனென்றால், அரசாங்கம் கூறுவது போல 13, 200 படையினர் (இராணுவத்தினர்) மட்டும் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டள்ளனர் என்றால் கூட அதுகூட மிகையானதுதான். ஏனென்றால், யாழ்ப்பாணம் இலங்கையின் மொத்தப் பரப்பளவில் 65 இல் ஒருபங்குதான்

பரப்பளவு ரீதியாக பார்த்தால், இரண்டு இலட்சம் பேரைக் கொண்ட இலங்கை இராணுவத்தில் யாழ்ப்பாணத்தில் 3 ஆயிரம் பேரைத்தான் நிறுத்த முடியும்.

சனத்தொகைக் கணக்கீட்டின் அடிப்படையில் பார்த்தால் 2012 கணக்கீட்டின்படி யாழ்ப்பாணத்தில் 583,378 பேர் வசித்ததாக கூறுகிறது அரசாங்கப் புள்ளிவிபரம். இலங்கையின் ஒட்டுமொத்தச் சனத்தொகை சுமார் 2 கோடி என்று கணக்கிடப்பட்டால், 100 பேருக்கு ஒருவர் என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் இராணுவத்தினர் உள்ளனர்.

அவ்வாறு பார்த்தால் யாழ்ப்பாணத்தில் 5,833 படையினரைத்தான் நிறுத்தி வைத்திருக்க முடியும். அதைவிட இரண்டு மடங்கு அதிகமான படையினர் யாழ்ப்பாணத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாகவே அக்கணக்கும் உள்ளது.

ஒட்டுமொத்த இங்கையின் சனத்தொகைக்கும். இராணுவத்தின் எண்ணிக்கைக்கும் இடையிலான விகிதாசாரம் 100 இற்கு 1 என்று உள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் 44 பேருக்கு 1 என்ற விகிதாசாரத்தில் இராணுவத்தினர் உள்ளனர்.

இவையனைத்தும் அரசாங்கப் புள்ளி விபரங்கள் அடிப்படையிலானவை.

வடக்கு கிழக்கில் ஏனைய மாவட்டங்களில் நிலைகொண்டுள்ள படையினரின் சரியான எண்ணிக்கையை அரசாங்கம் வெளியிட்டால் அங்கு இதைவிட அதிகமான அளவு படைச்செறிவு இருப்பதை துல்லியமாக உணரலாம்.

வடக்கில் படைகளைக் குவித்து வைத்திருப்பதற்கு போரையும் பதற்றமான சூழலையும் காரணம் காட்ட வேண்டிய சூழ்நிலை இப்போது இல்லை. பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ற பூச்சாண்டியும் கிடையாது.

இலங்கையில் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கல்வி வாய்ப்புகள் என்று எல்லாவற்றுக்குமே சனத்தொகை விகிதாசார ரீதியான ஒதுக்கீடுகள் இருக்கும் போது இராணுவம் மட்டும் தன்னிச்சையாக நிறுத்தப்பட்டுள்ளது. அத்தகைய ஒதுக்கீட்டைச் செய்தால், வடக்கில் இரண்டு டிவிஷன் படையினரைக் கூட நிறுத்த முடியாது. ஏனென்றால், வடக்கின் ஒட்டுமொத்த சனத்தொகை சுமார் 11 லட்சம் பேர்தான்.

ஏனைய மாவட்டங்களைப் போலத்தான் வடக்கிலும் படைகளை நிறுத்தி வைத்திருப்பதாக அரசாங்கம் கூறும் நியாயம் தற்போது சர்வதேச அளவில் எடுபடவில்லை. முற்றிலும் இயல்பானதொரு சூழலில் வடக்கில் பெருமளவு படைகள் குவிக்கப்பட்டுள்ளதை எல்லோராலும் உணர முடிகிறது.

இத்தகைய பின்னணியில் படைக்குறைப்பு கோரிக்கையை படைவிலக்கல் கோரிக்கையாக சித்தரித்து தனக்கான ஆதரவை அரசாங்கம் உறுதிப்படுத்திக்கொள்ள முயன்றாலும் சர்வதேச அளவில் இதற்கான அழுத்தங்கள் அதிகரிக்கக்கூடுமே தவிர குறையாது.

-தொல்காப்பியன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாதம் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

## ஜோதிடக் களம்

நீங்கள் அறிவியல்வாதியாகவோ, பெரிய அரசியல்வாதியாகவோ, இலட்சியவாதியாகவோ இருந்தாலும் சரி அடிப்படை உள்ளுணர்வில் நீங்கள் பெருமளவு கற்பனை வாதியே! ஏனெனில் ஆடிக் கடக மாதத்தில் நீங்கள் பிறந்த நேரத்தில் உங்கள் ஜாதகத்தில் சூரியன் நின்ற இடம் (வீடு) கடக இராசியாகும். அந்தக் கடக இராசிக்கு அதிபதி சந்திரன், சூரியன் தந்தை போல் இருந்து அறிவாற்றலுக்கான மூல வித்துக்களை வழங்கும். சந்திரனோ தாய் போல் இருந்து உள்ளுணர்வு எழுச்சிகளையும் உணர்ச்சிகளையும் அதிகம் வழங்கி அவற்றின் வழியே சூரியன் தந்த அறிவாற்றல்களோடு உங்கள் உடலையும் உடல் உள்ளுறுப்புக்களையும் செயற்படத் தூண்டி உங்களுக்கு வழிகாட்டும் வானத்து ஒளி விளக்காகத் திகழும்!

ஏனையவர்களை விட கடக மாதத்தில் பிறந்த உங்களுக்கே அமோகமான கற்பனைத்திறனும் உள்ளுணர்வின் ஆற்றலும் உணர்ச்சிகளும் அதிகமாக இருக்கும். உணர்ச்சிகள் என்றால் சாதாரண மேலோட்டமான உணர்ச்சிகள் அல்ல. பரிபக்குவமும் நிலையான தன்மையும் வாய்ந்த உணர்ச்சிகள்! கடலின் ஆழம் போன்ற அத்தகைய உள்ளுணர்வுகளிலே நீங்கள் சஞ்சரிப்பீர்கள்.

கடலின் ஆழம் போன்ற ஆழ்ந்த சிந்தனைகளினால் உருவாகும் கற்பனை உணர்வுகள் கடலின் அலைகள் போலவே வளர்பிறையில் மேலோங்கி வேகமாக வீசும். தேய்பிறைகளில் தாழ்ந்து பெருகிப் பரவும். ஏனையவர்களின் உணர்ச்சிகளையும் கண்ணாடியில் தெரியும் சாயல் போல் நீங்கள் தத்ரூபமாகப் பிரதிபலித்துக்காட்டுவீர்கள். உங்கள் கடகத்திற்கு அதிபதியான சந்திரனை மாத்ருகாரன் என்று ஜோதிடர்கள் கூறுவார்கள்.

அதாவது தாய்மை மனப்பான்மையையும் அதன் இயல்புகளையும் தன் கிரணங்களின் மூலம் உங்கள் இயல்புகளில் வழங்கக் கூடிய கிரகமாகும் சந்திரன். அதனால் நீங்கள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் காதல் முதல் அரசியல்வரை நீங்கள் ஒருவிதத் தாய்மை மனப்பான்மையையும் அதன் பரிவுணர்ச்சிகளையும் காட்டுவீர்கள். அந்த உணர்ச்சியின் அடிப்படையிலே உங்கள் அறிவாற்றலைக் கொண்டு புதிது புதிதாகப் பலவற்றை உருவாக்கி உங்கள் உள்ளத்திலிருந்து உலகிலே பிறந்து வளரச் செய்வீர்கள். உங்கள் கடக ஸ்தானம் என்பது குடும்பம், பெற்றோர் பாசம், ஆழ்ந்த ஈடுபாடு, பக்தி சிரத்தை, பாதுகாப்புணர்ச்சி முதலானவற்றைக் குறிக்கும் சின்னமாகும்.

எனவே, உங்களுக்குக் குடும்பப் பற்றும் அதிகமிருக்கும். நீங்கள் ஜீவ உற்சாகத்தோடு உறவாடக் கூடிய உங்கள் உறைவிடத்தையே இந்த உலகில் மிகப் பெரிய உடைமையாகவும் வாய்ப்பாகவும் கருதுவீர்கள். அத்தகைய குடும்பப் பற்று நாட்டுப் பற்றாகவும் விரிவடையும். உங்கள் தாய்நாடு, தாய்மொழி, தாய் இனம் முதலானவற்றின் மீதெல்லாம் உங்களுக்குப் பற்றுதலும் ஈடுபாடும் பெரும்.

கடகத்தின் ஸ்தானாதிபதியான சந்திரன் தமிழுக்கு உரியதாகையால் வேறு எந்த மொழியினராக இருந்தாலுங்கூட தமிழ் மீது உள்ளூர ஒருவிதப் பிரியமும் மதிப்பும் ஏற்படும். உங்களுக்குப் பிடிப்புள்ள சபைகள், சங்கங்கள், குழுக்கள், கட்சிகள், தொழில் யூனியன்கள், திரைப்படம், நாடகக் கம்பனிகள் முதலானவற்றில் எதுவாக இருந்தாலும் அதை உங்களுக்குப் பிரியமான குடும்பம் போலவே பாவித்து அரவணைத்துக் கொள்வீர்கள்! இந்தப் பண்பை நீங்கள் வளர்த்துக் கொண்டால் ஒரே உலகம்! மனித சமுதாயம் முழுவதும் ஒரே குடும்பம் என்ற அதி உன்னதமான இலட்சியத்தை உங்கள் உள்ளுணர்வாலும் பகுத்தறிவாலும் எட்டிப் பிடித்து விடுவீர்கள்!

கடக இராசியைத் தமிழ் ஜோதிடர்கள் நண்டு இராசி என்பார்கள். நண்டின் இயல்பும் இவர்களின் இயல்பும் ஒரே வகையானவை. கடற்கரை ஓரங்களிலும் கால்வாய் ஓரங்களிலும் வயல் வரப்புக்களிலும் வளைகளிலுள்ள நண்டுகள் இரை தேடுவதற்காக வளையிலிருந்து புறப்பட்டு அவசர அவசரமாகப் பரபரப்புடன் வெளியே ஓடிவரும். உலாவித்திரியும். ஆனால், மற்றவர் பார்வை பட்டாலும் சிறு சப்தம் கேட்டாலும் உள்ளுணர்வால் சட்டென்று பயந்து மின்னல் வேகத்தில் தன் வளைக்குள் ஓடி மறைந்து பதுங்கிக் கொள்ளும்.

அதுபோலவே கடக மாதத்தில் பிறந்வர்கள் மிகவும் பயந்த சுபாவமுடையவராக இருக்கலாம். ஆனால், அந்தப் பயம் உங்களுடைய பாதுகாப்பிற்குரிய முன்னெச்சரிக்கையாக விளங்க வேண்டுமே தவிர அது உங்களை முதுகெலும்பு இல்லாதவர்களாகவோ, கோழைகளாகவோ ஆக்கிவிட இடங்கொடுக்கக் கூடாது.

உங்களுக்கு நளினமான உள்ளுணர்வுகளும் உணர்ச்சிகளும் அதிகமாக இருக்குமாகையால் உங்களில் சிலருக்கு தாங்கும் சக்தியோ, தாக்கும் சக்தியோ குறைவாகவும் இருக்கக் கூடும். எனவே உங்கள் வலிமையைக் காட்டும்படியான உந்தலோ நெருக்கடியோ ஏற்பட்டாலொழிய வாழ்க்கையின் போராட்ட முனைகளில் சட்டென்று பின்வாங்கி ஓடி உங்கள் பழைய புகலிடத்திற்கே திரும்பி வந்து அதில் பதுங்கிக் கொண்டு உங்களுக்குள்ளேயே அடங்கி விடுவீர்கள்.

ஆனால், உங்களுக்கு உரியது என்று ஒன்றைப் பிடித்துக் கொண்டு விட்டாலோ அதை உங்கள் கைப்பிடிக்குள்ளேயே வைத்துக் கொண்டிருப்பதற்காக சிறிதும் பயமில்லாமல் உங்கள் சாதுரியம் அனைத்தையும் பயன்படுத்துவீர்கள். உங்கள் குடும்பமாக இருந்தாலும் சரி கட்சியாக இருந்தாலும் சரி பட்டம், பதவிகளாக இருந்தாலும் சரி உங்களுக்கே உரிய தனி உடைமை என்ற கருத்து ஆழமாக உங்கள் உள்ளுணர்வில் வேரூன்றி விட்டால் நண்டுபோல் விடாப்பிடியாகத் தன் கைப்பிடிக்குள்ளேயே நீடித்து வைத்துக் கொண்டிருக்க முனைவீர்கள். அதற்காகப் போராடுவீர்கள். பல இராஜ தந்திரங்களையும் கையாள்வீர்கள்.

கடைசியில் அதற்காக எந்தத் தியாகமும் செய்யத் தயாராகி விடுவீர்கள்!

உங்களுக்குத் தன் நோக்கங்களில் ஆழ்ந்த பிடிப்பு இருக்கும். நண்டு தன் கொடுக்குகளில் ஒன்றை இழந்தாலும் தான் இறுக்கிப் பிடித்ததை எளிதில் விட்டு விடாது என்பதுபோல எதிர்கால நம்பிக்கைகள் அனைத்தும் அழிந்து போனாலும் தன் நோக்கங்களை எளிதில் கைவிடமாட்டீர்கள். வாழ்வில் பெயர், பெரும் புகழ், செல்வம், செல்வாக்கு, பட்டம், பதவிகள் மக்களிடையே உண்மையான மதிப்பும் அதிகாரமும் இவற்றில் ஏதாவது ஒன்றையோ பலவற்றையோ பெற்றுத் திகழவேண்டும் என்ற ஆர்வம் உங்கள் உள்ளத்தில் இருந்து அடிக்கடி பெருகிவரும். அதற்காக உற்சாகமாக முயற்சி எடுத்துக் கொண்டு நீங்கள் பாடுபட்டால் அத்தகைய உயர்ந்த நிலைக்கு முன்னேறி விடுவீர்கள்.

ஆனால், முயற்சி எதுவும் எடுத்துக் கொள்ளாமல் தானாகவே அவை தேடி வரவேண்டும் என்று மந்த கதியில் இயங்குபவர்கள் மிகவும் பின்தங்கி தங்களையே மிகவும் நொந்து கொள்வார்கள்! ஆனால், இறுக்கமான நண்டுப் பிடி உங்கள் இயல்பில் அழுத்தமான பிடிவாதமாகவும் மாறிவிடக் கூடாது.

ஏனெனில் உங்களில் சிலர் விவேகமில்லாத விடயங்களிலும் முரட்டுப் பிடிவாதமாக இருப்பீர்கள். தோல்வியே அடைய நேரிட்டாலும் பிடிவாதத்தை விடமாட்டீர்கள். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்ற பழமொழி இத்தகையவர்களால்தான் தோன்றியிருக்க வேண்டும்.

(தொடரும்)

# சிறுநீரக ஆராய்ச்சி மையம் யாழில் அமைக்கப்படும்

(கொழும்பு)

நீண்ட காலமாக சிறுநீரக நோயினால் வாடும் நோயாளர்களுக்குத் தேவையான சகல மருந்துகளையும் எவ்விதப் பற்றாக்குறையும் இன்றி வைத்தியசாலைகள் மூலம் வழங்கும்படி சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வைத்தியசாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மெதிரிகிரிய தேசிய பாடசாலையில் நடைபெற்ற அமைச்சுக்களின் அதிகாரிகள் பங்கு பற்றிய மீளாய்வுக் கூட்டம் ஒன்றில் இதனை அமைச்சர் தெரிவித்தார்.

வடமத்திய மாகாணத்தில் கூடுதலாக நீண்டகால சிறுநீரக நோயாளர்களாக 16ஆயிரத்து 442 பேர் உள்ளனர்.

யாழ்ப்பாண பகுதியிலும் சிறுநீரக நோயாளர்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சிறுநீரக ஆராய்ச்சி நிலையங்கள் இரண்டை பொலநறுவை, யாழ்ப்பாண மாவட்டங்களில் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். முன்கூட்டியே இந்த நோய் தொடர்பாக கண்டறிய விரிவான திட்டத்தை அமுலாக்குமாறும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் சிறிபால கம்லத் உட்பட பல அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

(அ)

# பிரதமர், ஜனாதிபதிக்கு எதிராக செயற்பட்டுள்ளார்

## ரணில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

பிரதமர் டி.எம். ஜயரட்ன, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக செயற்பட்டு வருவதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் முதல் தடவையாக இலங்கையில் ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக, பிரதமர் ஒருவர் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டியில் பிரதமரின் புதல்வர் அனுராத ஜயரட்னவின் ஆதரவாளர்கள் அண்மையில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தனர். மத்திய மாகாண முதலமைச்சார் பதவி அனு ராத ஜயரட்னவிற்கு வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரதமர் ஜயரட்னவைக் காணக் கிடைத்ததாக ரணில் தெரிவித்துள்ளார்.

தாம் பிரதமராக கடமையாற்றிய காலத்தில் ஜனாதிபதியுடன் முரண்பாடுகள் காணப்பட்ட போதிலும் வீதியில் இறங்கி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு எதிராக போராட்டம் நடத்தவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கத்தில் நிலவி வரும் உட்கட்சி பூசல் பூதாகரமாகியுள்ள நிலைமையே இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் மூலம் வெளிப்பட்டுள்ளது. ஆளும் கட்சிக்குள் நிலவி வரும் முரண்பாடுகள் இன்னமும் அம்பலத்திற்கு வரவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)



யாழ். மாநகர சபையின் சுகாதரப் பிரிவும் யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயம், சென். பெனடிக்ற் பாடசாலை ஆகியன இணைந்து நடத்திய டெங்கு ஒழிப்பு பேரணி நேற்று இடம்பெற்ற போது... (படங்கள்: என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புக்கள் வந்தாலும் அரசின் நடவடிக்கைகள் தொடரும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**அனைத்து மக்களும் சுதந்திரமாக வாழ்வதற்கு உகந்த நாடொன்றை உருவாக்கியுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் இந்த நாட்டில் கூடாத யுகமொன்றுக்கு மக்கள் இடமளிக்கக் கூடாது எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

மொரட்டுவ சொய்சாபுரவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைவருக்கும் வீடு என்ற இலக்குடன் அரசாங்கம் திட்டமிட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கையில் இத்தகைய அபிவிருத்திகளைத் தடை செய்வதற்கு சில சக்திகள் கங்கணம் கட்டி செயற்பட்டு வருகின்றனர்.

எத்தகைய பாதிப்புக்கள் வந்தாலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடரும் எனவும் தெரிவித்தார்.

கிராமங்கள், நகரங்கள் என்ற ஏற்றத்தாழ்வின்றி அபிவிருத்தியும் எழில் மிகுந்த சூழலும் சமமாக உருவாக்கப்பட்டு வருவதாக தெரிவித்த ஜனாதிபதி வேறுநாடுகளில் மக்கள் குகைகளில் வாழ்ந்த யுகத்தின் போதும் அக்காலத்திலேயே கிராமங்கள், நகரங்களை அமைத்து வாழ்ந்த பெருமைக்குரிய வரலாறு எமக்கு உள்ளது எனவும் தெரிவித்தார்.

நாம் மக்களுக்கு வீடுகளையும் நாட்டு மக்களில் 90 வீதத்துக்கு மேற்பட்டவர்களுக்கு மின்சாரத்தையும் நீரையும் வழங்கி அபிவிருத்தியில் நாட்டைக் கட்டியெழுப்பி வருகையில் சிலர் எமக்கு கடன் வழங்கக் கூடாது என வங்கிகளுக்கு முன்பாக ஊர்வலம் செல்கின்றனர்.

ஐ.நாவுக்கும் மனித உரிமை அமைப்புக்கும் பெட்டிசன்களை அனுப்புகின்றனர். இச் செயல்களால் நாம் எமது செயற்பாடுகளை நிறுத்தப் போவதில்லை.

சகலருக்கும் வீடு என்ற இலக்கை அரசாங்கம் தற்போது வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறது. நாட்டின் சகல பகுதிகளிலும் இலட்சக் கணக்கான வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. யுத்தத்தினால் பாதிப்புற்ற வடக்கிலும் மீளக் குடியமர்ந்தவர்களுக்காக மூன்று இலட்சம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

பெற்றுக் கொண்ட வெற்றியை எவரும் அபகரிக்க நாம் இடமளிக்க முடியாது. மீண்டும் கூடாரங்களில் மடுவங்களில் வாழ நிர்ப்பந்திக்கப்படும் யுகம் ஏற்பட இடமளிக்கக் கூடாது.

எமக்கான சுதந்திரமாக வாழும் உரிமையை இழக்கக் கூடாது என நான் இந்த உலக குடியிருப்பு தினத்தில் நாட்டு மக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# யாழ்.பல்கலையில் ஒப்பந்த ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி பாதிக்கப்பட்ட ஊழியர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்றையதினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக நடைமுறையின்படி நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டிய இவர்களை புறக்கணித்துவிட்டு வடக்கு தேர்தலுக்கு முன்னதாக பட்டியலிடப்பட்டவர்களுக்கு நிரந்தர நியம னம் வழங்கப்பட்டுள்ளதையடுத்தே இவ் ஆர்ப்பாட்டத்தை ஒப்பந்த ஊழியர்கள் நடத்தியுள்ளனர்.

குறித்தவொரு தொகுதியினருக்கு உயர் கல்வியமைச்சினால் சிபாரிசு செய்யப்பட்டதாக கூறி கடந்த ஜூலைமாதம் 19ஆம் திகதிக்கு முன்னதாக சுயவிபரம்கோரப்பட்ட கடிதம் தாபனக் கிளையின் கல்விசாரா சிரேஷ்ட உதவிப் பதிவாளரினால் அனுப்பப்பட்டிருந்தது.

எனினும் அம்முடிவுத் திகதிக்கு முன்னதாகவே சிலருக்கு ஜூலை 10 ஆம் திகதிக்கு நேர்முகத்தேர்வுக்கு வருமாறு வாய்மொழி மூல அறிவித்தல் விடுக்கப்பட்டு நேர்முகத் தேர்வும் இடம்பெற்றுள்ளது.

இச்செயற்பாடு தவறானது எனவும் அறிவிக்கப்பட்ட திகதி முடிவடைவதற்குள் நேர்முகத் தேர்வு நடத்தியமை அடிப்படை மனிதவுரிமை மீறலாகும் எனவும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அப்போது சுட்டிக்காட்டியிருந்தது.

மேலும் யாழ்.பல்கலைக்கழக நடைமுறையின்படி பல்கலையில் ஏற்கனவே கடமையாற்றியவர்களின் பிள்ளைகளை ஒப்பந்த அடிப்படையில் பணியில் இணைத்துக் கொண்டு பின்னர் அவர்களுக்கு தற்காலிக நியமனம் வழங்கி நிரந்தர நியமனம் வழங்கப்படுவது நடைமுறையாகும்.

எனினும் இந்நடைமுறை பின்பற்றப்பட்டாலும் நேர்முகத் தேர்விலும் முறைகேடுகளை ஏற்படுத்தி வடக்கு தேர்தலை நோக்காகக் கொண்டு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஊழியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இம்முறைகேடான நியமனத்தால் ஒரு வருட காலமாக யாழ்.பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் நாம் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே உரியவர்கள் இதுவிடயத்தில் கவனமெடுத்து நியாயமான முறையில் செயற்பட்டு தமக்குரிய நியமனத்தினை வழங்குமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

இவ்வேளை ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் ஊழியர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டதோடு தான் இதுவிடயத்தில் கவனமெடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார். (அ-4)

# உண்ணாவிரதம் இருந்த தியாகு மருத்துவமனையில்

(சென்னை)

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் எதிர்ப்பியக்கம் சார்பில் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வந்த தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தோழர் தியாகு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொதுநலவாய கூட்டமைப்பிலிருந்து இலங்கையை நீக்க வேண்டும். மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது. அதில் இந்தியா பங்கேற்கக் கூடாது உள்ளிட்ட 9 கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி முதல் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் காலவரையறையற்ற உண்ணாப் போராட்டத்தில் தோழர் தியாகு ஈடுபட்டு வந்தார்.

போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் தமிழக அரசு சார்பில் வந்த மருத்துவர் குழு தோழர் தியாகுவின் உடல் நிலையை சோதித்தது. அதன்பின் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டுமென பொலிஸ் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதனையடுத்து தோழர் தியாகு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாலும் சிறையில் அடைக்கப்பட்டாலும் உண்ணாப் போராட்டம் தொடரும் என அறிவித்தார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கமாட்டேன்!

## கனேடியப் பிரதமர் ஸ்டீபன் அறிவிப்பு

கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் அறிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய மனிதவுரிமை நிலைமைகளை கருத்தில் கொண்டே தான் இத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் தனக்கு பதிலாக கனேடிய சர்வதேச மனித உரிமைகளுக்கான வெளிவிவகார அமைச்சரின் நாடாளுமன்றச் செயலாளர் தீபக் ஒபராய் இம்மாநாட்டில் கலந்து கொள்வார் எனவும் கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டை நடத்துவதற்கு இலங்கை தெரிவு செய்யப்பட்ட போது, அது தனது மனிதவுரிமை நிலைமைகளை மேம் படுத்தவும் நல்லிணக்கத்தை நோக்கிச் செல்லும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும் என கனடா நம்பியதாகவும், ஆனால் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை எனவும் இவ்வறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் தான் ஆழ்ந்த கவலை கொள்வதாகவும் இலங்கையில் இடம்பெற வுள்ள போரின் போதும் அதன் பின்னருமான மனிதவுரிமை மீறல்கள், சர்வதேச மனிதா பிமான தரங்கள் தொடர்பில் இலங்கை பொறுப்பற்று இருப்பதனை ஏற்றுக் கொள்ள முடி யாது எனவும் இவ்வறிக்கையில் ஸ்டீபன் ஹார்பர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கை பிரதம நீதியரசர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை, அரச தலைவர்கள், ஊடகவியலாளர்கள், சிறுபான்மையினர் காணமற் போதல் போன்ற சம்பவங்கள் தொடர்பிலும் கனேடிய பிரதமர் தனது அறிக்கையில் விபரமாகக் குறிப்பிட்டுள்ளார். (செ-11)



யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையேற்றுக் கொண்ட எஸ். கணேசநாதனை வரவேற்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 8.45 மணியளவில் யாழ். பொது நூலகத்துக்கு முன்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அணிவகுப்பினை பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (படம்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்கனி பெற்ற விக்னேஸ்வரனை விக்னேஸ்வரன் பெற்றது பெரும்பேறே!



மனிதன் சுதந்திரம் வேண்டும் என நினைக்கின்றான். ஆனால், அவன் தனது சொந்த எண்ணங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் உணர்வுகளுக்கும் அடிமைப்பட்டுள்ளான் என்பதைப் புரிந்துகொள்வதில்லை.

மனிதர்களிடம் உயர்ந்த சிந்தனைகளும் எண்ணங்களும் இருக்க வேண்டும். அதற்காக அந்த சிந்தனைகளுக்கும் எண்ணங்களுக்கும் அவன் அடிமையாகிவிடக் கூடாது.

அவ்வாறானதொரு அடிமைத்தனத்திற்கு மனிதன் ஆட்பட்டு விட்டால், அவன் விரும்புகின்ற - பெற்றுக் கொள்கின்ற சுதந்திரத்தால் எந்தப் பயனும் கிடைத்து விடாது என்பது தத்துவம். இத்தத்துவக் கருத்தை ஒரு கணம் சிந்திப்போம்.

இந்தத் தத்துவம் எங்களுக்கு நிறையவே பொருந்தும். நாங்கள் சுதந்திரம் வேண்டும் என நினைக்கின்றோம். அதேநேரம் சுதந்திரத்திற்கான எங்கள் சிந்தனைக்கு நாம் சில சமயம் அடிமைப்பட்டு விடுகிறோம். இந்த நிலைமையானது, சுதந்திரமாகச் சிந்திப்பதற்கும் தீர்மானம் எடுப்பதற்கும் எம்மால் முடியாமல் போய்விடும். அத்தகையதொரு இயலாமை எங்களுக்குக் கிடைக்க வேண்டிய சுதந்திரம் கிடைப்பதற்குப் பெருந்தடையாகி விடுகிறது.

எனவே, கால நேர சூழ்நிலைகளுக்கேற்ப எங்களின் முடிபுகளை மாற்றிக்கொள்கின்ற நெகிழ்வுத் தன்மையை நாம் ஏற்படுத்திக் கொள்வது அவசியம். இல்லையேல், கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை இழந்து எல்லாவற்றையும் பறிகொடுக்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோம் என்ற உண்மைகளை உணர்ந்து கொள்வது அவசியம்.

### ஆழமாகச் சிந்தித்தால் எதிலும் ஒரு தத்துவம் தெரியும்

நேற்று முன்தினம் 07ஆம் திகதி வலம்புரி எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில்; எந்தக் கருமத்தை ஆரம்பிப்பதாக இருந்தாலும் விநாயகப் பெருமானை வழிபாடு செய்வது வழமை. விநாயகனுக்கு விக்னேஸ்வரன் என ஒரு நாமம் உண்டு. ஆக, அந்த நாமத்தைக் கொண்ட ஒருவர் வடக்கின் முதலாவது முதலமைச்சராகப் பதவியேற்பது, பொருத்துடையது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அவ்வாறு குறிப்பிட்ட அதே நேரம் நேற்று முன்தினம் 7 ஆம் திகதி சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் வடக்கின் முதலமைச்சராகப் பதவியேற்றபோது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு நினைவுப் பரிசொன்றை வழங்கியிருந்தார்.

நினைவுப்பரிசை ஜனாதிபதி வழங்குவார் என யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி வழங்கிய நினைவுப்பரிசு விநாயகர் சிலை என்பது வியப்புக்குரியது.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு விக்னேஸ்வரனை வழங்குவ தென்பது பொருத்துடையது என ஜனாதிபதி அல்லது அவர் சார்ந்த குழுமம் முடிவு செய்திருக்கலாம். ஆனால், இங்குதான் ஒரு பெரும் தத்துவம் உணர்த்தப்படுகின்றது.

ஏற்கனவே வவுனியாவில் உள்ள எரிபொருள் நிலையத்தில் உணர்த்தப்பட்ட தத்துவம் பற்றி இப்பகுதியில் பார்த்திருந்தோம்.

இப்போது அலரி மாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தபின் நினைவுப் பரிசில் வழங்கியதனூடாக இன்னொரு தத்துவம் வடக்கின் முதலமைச்சருக்கும் தமிழ்மக்களுக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் உணர்த்தப்பட்டுள்ளது. அதாவது, இந்து சமயத்தில் காணாபத்திய தெய்வமாக விளங்குபவர் விநாயகர்.

இந்து ஆலயங்கள் எதுவாயினும் அங்கு பிள்ளையாரை பிரதிஷ்டை செய்து அவருக்கே முதலில் வழிபாடு செய்வது வழமை. விநாயகனின் தந்தையாகிய சிவபெருமானின் ஆலயமாக இருந்தாலும் முதற்பூசை பிள்ளையாருக்கு என்பதுதான் இங்கு இருக்கக்கூடிய முதன்மைச் சிறப்பு.

அத்தகைய சிறப்பு விநாயகருக்கு ஏற்பட்டது ஏன் என்பதற்கு நாம் விளக்கம் கொடுப்பதைவிட விண்வெளிப் பயண வீராங்கனை சுனித்தாவில்லியம் அவர்கள் கொடுக்கும் விளக்கத்தை இங்கு கூறுவதே சாலப் பொருத்தம்.

விண்வெளியில் ஆறுமாதங்கள் சஞ்சரித்தவர் சுனித்தா வில்லியம். இந்திய வம்சாவழிப்பெண்ணான சுனித்தா வில்லியம் தற்போது அமெரிக்காவில் வசிக்கின்றார்.

2012ஆம் ஆண்டு விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டு ஆறு மாதங்கள் விண்வெளியில் சஞ்சரித்தார். அவர் தனது விண்வெளிப் பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்கா திரும்பியதும் சென்னை பல்கலைக்கழக மாணவர் அவரை இணையவழி யூடாகச் செவ்வி கண் டனர்.

அதில் ஒரு மாணவன், அம்மையாரைப் பார்த்து விண்வெளிப்பயணத்தின்போது உங்களுடன் எதையாவது எடுத்துச் சென்றீர்களா? என்று கேட்டான்.

அந்தக் கேள்விக்கு சுனித்தா வில்லியம் அளித்த பதில் வியப்புக்குரியது. எனது விண்வெளிப் பயணத்தின் போது இரண்டு பொருட்களை என்னுடன் எடுத்துச் சென்றேன். அதில் ஒன்று பகவத்கீதை. மற்றையது ஒரு சிறிய பிள்ளையார் சிலை.

கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த தாங்கள் பிள்ளையார் சிலையை எடுத்துச் சென்றதன் நோக்கம் யாது? என்று அந்த மாணவனின் கேள்வி தொடர்ந்தது. சுனித்தா வில்லியம் புன்சிரிப்புடன் "பிள்ளையார் அறிவின் வடிவம். ஞானத்தின் தோற்றம். ஞாபகசக்தியின் அடையாளம். அவர் என்னோடு இருப்பது என் அறிவு ஞானத்திற்குத் துணை என்று கருதினேன்" எனப்பதில் அளித்தார்.

விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டு சாதனை படைத்த ஒரு பெண்மணி பிள்ளையார் பற்றிக் குறிப்பிட்ட பேருண்மை உங்கள் சிந்தனையைத் தொட்டிருக்கும். அதேநேரம் அவர் கூறியதை ஆதாரப்படுத்தும் மாங்கனி பற்றிய புராணக் கதையும் எங்களிடம் உண்டு.

ஒருமுறை நாரதமுனிவர் கிடைத்தற்கரிய மாங்கனி ஒன்றை எடுத்துச் சென்று சிவபிரானிடம் கொடுத்து விடுகிறார். நாரதர் தந்த மாங்கனியை தம் பிள்ளைகளுக்குக் கொடுப்பதே பொருத்தம். அதிலும் அரிதான மாங்கனி என்பதால் அதை ஒருவருக்கு மட்டுமே கொடுக்கவேண்டும் என்பது நிபந்தனை.

விநாயகனுக்கும் முருகனுக்கும் தகவல் கூறப்படுகிறது. இருவரும் தமக்கே மாங்கனி என்கின்றனர். இப்போது சிவனின் வீட்டிற்குள் உள்ளக முரண்பாடு. முரண்பாடு எங்கும் வரலாம். வீட்டுக்குள் வரக்கூடாது. அவ்வாறு வந்தால் அது கூட்டைக் குலைத்துவிடும்.

முரண்பாட்டைச் சமாளிக்க போட்டி நடத்தப்படுகிறது. இந்த உலகத்தைச் சுற்றி யார் முதலில் வலம் வருகிறீர்களோ! அவர்களுக்கே மாங்கனி என்று அறிவிக்கப்படுகிறது. மாங்கனியைப் பெறும் ஆர்வக்கோளாறில் முருகன் மயில் மீதேறி வலம் வரப் புறப்பட்டுவிட்டார்.

விநாயகனோ! ஆழமாகச் சிந்தித்து, பாராளும் அன்னையும் பிதாவுமே உலகம் என்று முடிவு செய்து சிவனையும் உமையையும் வலம் வந்து மாங்கனியைப் பெற்றுக்கொள்கிறார்.

உலகெலாம் சுற்றிவந்த முருகன் தன் தோல்வியைப் பொறுக்கமுடியாதவராக - கோபம் தணிக்கமுடியாதவராக ஆடை களைந்து கவசணத்துடன் பழனிக்குச் செல்கிறார்.

இந்தப் புராணக்கதை விநாயகர் அறிவுடையவர், ஆழமாகச் சிந்திப்பவர் என்பதைச் சுட்டி நிற்கின்றது.

அலரிமாளிகையில் வைத்து முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு நினைவுப்பரிசாகக் கிடைத்த பிள்ளையார் ஒரு பெரும் தத்துவத்தை உணர்த்தி நிற்கிறார்.

அதாவது நான் எங்ஙனம் அறிவு ஞானத்தை பயன்படுத்தி மாங்கனியைப் பெற்றுக்கொண்டேனோ அதுபோல முதலமைச்சராகிய நீங்களும் அறிவு ஞானத்தைப் பயன்படுத்தி தமிழர்களின் உரிமையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

உங்களின் முயற்சிக்கு நான் துணையாக நிற்பேன். என்னை எடுத்துச் சென்ற சுனித்தா வில்லியத்தின் விண்வெளிப் பயணம் எவ்வாறு வெற்றிப் பயணமாக நிறைவேறியதோ! அதுபோல என்னை எடுத்துச் செல்லுங்கள் நிச்சயம் தமிழர்களின் உரிமைக்கான உங்கள் பயணம் வெற்றிதரும்.

அலரிமாளிகைக்கு வராமல் தாபம் கொண்டவர்களின் கோபம் நீடிக்குமாயின் என் தம்பி பழனியில் நின்ற கோலம்தான் அவர்களுக்கும் மிஞ்சும்.

நீங்கள் எது பற்றியும் கவலை கொள்ளற்க. முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு இந்த விக்னேஸ்வரன் துணை. உங்கள் பணியை இதய சுத்தியோடு-ஆத்ம பலத்தோடு செய்யுங்கள். தென்னிலங்கை/செய்துவிட்ட நெட்டூரங்களால் வேதனைப்படும் தமிழ்மக்களின் வாழ்வு சிறக்க கடுமையாகப் பாடுபடுங்கள். எல்லாம் நன்மையாக நடக்கும் என்பதுதான் இத்தத்துவம்.

அந்த விக்னேஸ்வரன் மாங்கனி பெற்றார். இந்த விக்னேஸ்வரன் மாங்கனி பெற்றவரைப் பெற்றார். பெற்றது பெரும் பேறுதான்.

- விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர வைத்தியரை நியமிக்க கோரிக்கை

(மல்லாவி)

**முல்லை.மாவட்டத்தில் நெட்டாங்கண்டல், துணுக்காய், ஐயங்கன்குளம் ஆகிய கிராமிய வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்தியர் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக இப்பகுதி மக்களும் பொதுஅமைப் புக்களின் பிரதிநிதிகளும் விசனம் தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பாக தெரியவருவது, போரினால் பாதிக்கப்பட்டு கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற் றம் செய்யப்பட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 700 குடும்பங்களைச் சேர்ந்த 9ஆயிரத்திற்கு மேற்பட்ட அங்கத் தவர்கள் வசிக்கின்றனர்.

இவர்களுக்குரிய ஒரே ஒரு வைத்தியசாலை நெட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையாகும்.

இவ் வைத்தியசாலையில் நிரந் தர வைத்தியர் நியமிக்கப்பட வில்லை. இதனால் இப்பகுதி மக்கள் சிகிச்சை பெறுவதற்காக மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கே சென்று வருகின்றனர்.

இரவு நேரங்களில் ஏற்படும் பாம்புக்கடி மற்றும் விலங்குகளால் ஏற்படுகின்ற பாதிப்புகளுக்கு உடனடி சிகிச்சை பெற இப்பகுதியில் வசதி யின்மையில் பல உயிரிழப்புக்கள் ஏற்படுகின்ற அபாய நிலையும் தோன்றியுள்ளது.

இதேபோல் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 3ஆயிரத்து 550 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ள நிலையில்,

பின்தங்கிய கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள துணுக்காய் மற்றும் ஐயங்கன்குளம் வைத்திய சாலைகளிலும் நிரந்தர வைத்தி யர்கள் நியமிக்கப்படவில்லை.

இதனால் மக்கள் மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு பல மைல் தூரம் நடந்து சென்றே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இங்கு செல்வதற்கு போக்கு வரத்து வசதிகளையாயினும் ஏற் படுத்திக் கொடுத்திருக்க வேண்டும். நிலைமை இப்படியிருக்க மாங்கு ளம் ஆதார வைத்தியசாலையில் மட்டும் வைத்தியர்கள் மூவர் நிரந்தர கடமையில் இருப்பது குறிப்பிடத்தக் கது.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற் றுகின்ற சாரதிகள் உள்ளிட்ட சிற் றூழியர்கள் தமது வேலை நேரத் துக்கு மேலதிகமாக 90 மணித்தி யாலங்கள் வேலை செய்தபோதி லும் வேலை செய்யப்பட்ட நேரம் 45 மணித்தியாலங்கள் என்றே பதிவு செய்யப்படுகின்றது.

இந் நிலையில் 3 மாதங்களுக் குரிய மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படாதுள்ளதாகவும் அவர் கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, மேற்படி விடயங்கள் தொடர்பாக உரிய அதிகாரிகள் நட வடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்களும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-15)

## ஒரு வருட கடூழியச்சிறை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சுதந்திரபுரம் கொலனிப்பகுதியில் மோட்டார் சைக்கிள் திருத்தம் சம்பந்தமாக நடைபெற்ற வாக்குவாதத்தில் ஈடுபட்டு சங்கிலியாலும் உருட்டுக் கட்டையாலும் நபர் ஒருவரை தாக்கிய மூவருக்கு ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

காயத்தின் தன்மை மற்றும் வழக்கின் பாரதூரத்தன்மையை கொண்டு மேற்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (ம)

★ ★ ★

ஒட்டுசுட்டான் பகுதியில் ஒரு மனைவி இருக்கையில் மற்றொரு பெண்ணை திருமணம் புரிந்த நபர் ஒருவருக்கு இருதாரமணக் குற்றச் சாட்டினடிப்படையில் ஒருவருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

இரண்டாவது மனைவியும் தன்னை கைவிட்டு சென்றுவிட்டதாக அவர் மன்றில் தெரிவித்தார். (ம)

## வவு. கடும் வரட்சி; குடிநீர் தட்டுப்பாடு

(குருமன்காடு)


வவுனியாவில் தொடர்ந்து நீடிக் கும் கடுமையான வரட்சி காரண மாக குடிநீர் தட்டுப்பாடு ஏற் பட்டுள் ளது. இதனால் பல குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

வவுனியா மாவட்டத்தில் அமைந் துள்ள பெரிய குளங்களில் நீர் மட் டம் குறைவடைந்ததால் கிணறுகள் வற்றிய நிலையில் காணப்படுகின் றன.

இதனால் பல இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் தமக்கு குடிநீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர. வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, பருவகால மழை பெய்யுமென எதிர்பார்த்து பெரும் போகச் செய்கைக்கென வயல் நிலங் களை பயன்படுத்திய விவசாயிகள் நெல் விதைப்பை மேற்கொள்ள முடியாத நிலையிலும் காணப்படு கின்றனர். (ம-250)



முல்லைத்தீவு நகரத்தில் உள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத் திற்கும் முல்லை.மாவட்ட செயலகத்திற்கும் முன்பாக கட்டாக்காலி மாடுகள் படுத்துறங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:- முல்லைத்தீவு செய்தியாளர்)

## இளைஞர் விருது வழங்கல் விழாவை முன்னிட்டு கலாசாரப் போட்டிகள்

(கிளிநொச்சி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினரால் நடத்தப்பட வுள்ள 2013 இளைஞர் விருது வழங்கல் விழாவுக்கான கலாசாரப் போட்டிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற் றுக்கிழமையும் காலை 8 மணி முதல் ஏ-9 வீதி 155 ஆம் கட்டை யில் அமைந்துள்ள தேசிய இளை ஞர் சேவைகள் மன்றத்தின் மாவட் டச் செயலகத்தில் நடைபெறவுள் ளன.

இதில் அறிவிப்பாளர், பேச்சு, இளம் பாடகர், கிராமியப்பாடல், புத் தாக்க நடனம், பரத நாட்டியம், கிரா மிய நடனம் ஆகிய தமிழ் மொழி மூலமான போட்டிகள் எதிர்வரும் 12 ஆம் கிககி சனிக்கிமமையும் அறி விப்பாளர், பேச்சு ஆகிய ஆங்கில மொழி மூலமான போட்டிகள் மறு நாள் ஞாயிற்றுக்கிழமையும் நடை பெறவுள்ளன.

இப் போட்டிகளுக்காக விண்ணப் பித்த அனைவரும் அன்றைய தினம் இப் போட்டிகளில் கலந்து கொள்ளு மாறும் முன்னதாக இப் போட்டிக ளுக்கு விண்ணப்பிக்காது தற்பொ ழுது இப் போட்டிகளில்பங்கு கொள்ள விரும்புவோர் அன்றைய தினம் குறித்த இடத்திற்கு வருகை தந்து போட்டிகளில் பங்கு கொள்ள முடியும் எனவும் தேசிய இளைஞர் சேவை கள் மன்ற உதவி இயக்குநர் அறி வித்துள்ளார். இளைஞர்விருது வழங் கல் போட்டிகளில் 14 - 29 வயதுக்குட் பட்டவர்களே பங்கு பற்ற முடியுமென் பது குறிப்பிடத்தக்கது. (ம-254)

## சந்தேக நபரை கைது செய்க; நீதிபதி உத்தரவு

வள்ளிபுனம் நாவாடி காட்டுப் பகுதியில் கசிப்பு அருந்திவிட்டு சண்டையில் ஈடுபட்ட ஐந்து நபர் களில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இவர்கள் ஐவரும் கடை யொன் றில் கொள்ளையடித்து அப் பணத்தை கொண்டு கசிப்பு அருந் தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குள்ளாகி இருந்த நபர் 32 வயது மதிக்கத்தக்க வாய் பேசமுடியாத ஒருவர் எனவும் தெரி விக்கப்படுகிறது. மேற்குறித்த நபரின் மரண விசாரணையை வள்ளிபுனத் திற்கு சென்று நடத்திய முல்லைத் தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாச கர் கணேசராஜா மரணத்தை ஏற் படுத்தியதாக சந்தேகிக்கப்படுபவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப படுத்துமாறும் உடலை உறவினர் களிடம் பாரப்படுத்துமாறும் உத்தர விட்டுள்ளார். (ம)

## சமுதாய சீர்திருத்த பிரிவு ஆணையாளர் முல்லைக்கு விஜயம்

(முல்லைத்தீவு)

சிறைச்சாலை புனர்வாழ்வு அமைச்சின் கீழ் இயங்கும் சமு தாய சீர்திருத்தப் பிரிவு திணைக்களத் தின் ஆணையாளர் டீ.எல்.சன்ன சூரிய முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்றுக்கு விஜயம் செய்து முல் லைத்தீவு மாவட்ட நீதிமன்ற பதிவாளர் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா ஆகியோரை நேற்று சந்தித்து உரையாடியுள்ளார்.

தண்டப்பணம் செலுத்த இய லாது நீண்டகாலம் சிறையில் இருப் பவர்களை சமுதாய சீர்திருத்த நட வடிக்கையில் ஈடுபடுத்தியது தொடர் பில் கலந்தாலோசனை நடத்திய ஆணையாளர், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா சமுதாய சீர்திருத்த பிரிவை முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்றில் இயங்க வைத்து அதனை சிறப்பாக நடத்தி பொதுமக்களுக்கு ஆற்றும் சேவையை பாராட்டியுள்ள துடன் தொடர்ந்தும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் இப் பிரிவுக்கு தனியான கட்டம் ஒன்றை அமைத்து அதற்குரிய வசதிகளை ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுப் பதாகவும் உறுதியளித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உயர்ந்த இலட்சியமுடையவன்
பிறர் உயர்வடைய உதவுகிறான்.
- ஹென்றி ஃபோர்டு

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழ்த் தலைமைகளின் நல்லெண்ணத்தை மதியுங்கள்

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை தமிழ் – சிங்கள இனங்களுக்கிடையில் சுமுகமான சூழ்நிலையை தோற்றுவிற்பதற்குக் களம் அமைத்துள்ளது.

ஜனாதிபதிக்கு முன்பாகச் சத்தியப்பிரமாணம் செய்வதில்லை என்றொரு தீர்மானத்தை எடுத்துக்கொண்டு அதன் பிரகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தால் யாரும் எதுவும் செய்ய முடியாது.

ஆனால் அப்படியொரு தீர்மானத்தைத் எடுப்பது இனங்களுக்கிடையிலான நல்லுறவுக்கு ஆரோக்கியமானதல்ல என்பதன் அடிப்படையில், அரசியலில் அனுபவம் மிக்க தலைவர் இரா.சம்பந்தரும், ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரனும் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வதெனத் தீர்மானித்துக் கொண்டனர்.

வடக்கின் முதலமைச்சராகப் பதவியேற்பவர் எனக்கு முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வது எனக்கும் பெருமை தருவதாகும் என இரா.சம்பந்தர் நினைத்திருந்தால், ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தல் என்ற பேச்சுக்கே இடமிருந்திருக்காது.

எனவே தன்னைக் கெளரவப்படுத்தக் கூடிய ஒரு பெறுமதியான சந்தர்ப்பத்தை நல்லெண்ணம் கருதி சம்பந்தர் விட்டுக்கொடுக்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வடக்கின் முதலமைச்சராக விக்னேஸ்வரன் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி முன்பாக சத்தியப்பிரமாணம் செய்வது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் முரண்பட்ட கருத்துக்கள் நிலவியிருந்தாலும் தலைமை எடுத்த முடிவுக்கு கட்டுப்படுதல் என்ற பொது நிலையில், சலசலப்புக்கள் தணிந்து கொண்டன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வது தொடர்பில் அவர்கள் அறவே அலட்டிக்கொள்ளவில்லை.

கிளியின் கழுத்தே நம் இலக்கு. பின்பு எதற்காக கிளை, இலை, பூ, காய் பற்றி அலற்றிக் கொள்வான் என்பது மக்களின் முடிபு.

வடக்கு மாகாண சபைத்தேர்தலில் யாருமே எதிர்பாராதவகையில் திரண்டெழுந்து வாக்களித்த தமிழ் மக்களின் தீர்க்கமான சிந்தனையை உலகம் போற்றி நிற்கும் போது சம்பிரதாயமான சத்தியப்பிரமாண நிகழ்வை அவர்கள் பெரிதுபடுத்த மாட்டார்கள்.

நிலைமை இதுவாக இருக்க, வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அலரி மாளிகையில் ஜனாதிபதிக்கு முன்பாகச் சத்தியப்பிரமாணம் செய்ததை ஜனாதிபதியும் அரசும் சிங்களமக்களும் வரவேற்க வேண்டும்.

வன்னிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை சங்காரம் செய்த எங்களிடம் தமிழ் மக்கள் தங்கள் பெருந்தன்மையைக் காட்டி விட்டனர் என்பதை இவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழர்கள் தங்கள் உரிமைக்காக, தங்கள் உயிரைத் தியாகம் செய்தவர்கள். அந்தத் தியாகங்களை அழித்து விட்டதாக எவரும் நினைத்துவிடக் கூடாது.

கொழும்பு பஸ்ஸில் உரிமை கோரப்படாத பாசல் ஒன்று இருந்தால் போதும் கொழும்பு மாநகரமே நடுங்கிப் போகும். அந்தளவிற்கு நிலைமை இருந்தது என்பதை மறந்து விடுவதும் நல்லதல்ல.

நீங்கள் எங்களுடன் இணைந்து செயற்பட்டால் நாங்கள் வடக்கின் அபிவிருத்திக்கு தாராளமாக உதவுவோம் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

இங்கு இணைந்து செயற்படுதல் என்பதில் ஜனாதிபதியின் வகிபாகம்தான் அதிகம் என்பதும் உணரப்பட வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் அரசாங்கம் தமிழர்களின் பெருந்தன்மைக்கு – விட்டுக்கொடுப்பிற்கு மதிப்பளிப்பதும் இதய சுத்தியோடு உரிமைகளை வழங்க முன்வருவதும் அவசியம். இதுவே இலங்கைத் திருநாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்தும்.

# மனிதவுரிமை தொடர்பான கல்வித்திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான கல்வித்திட்டம் ஒன்றை நடத்த இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கைக்கு விஜயம செய்திருந்த போது இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் பிரதிநிதிகளை சந்தித்து இவ்வாறான யோசனை ஒன்றை முன்வைத்திருந்தார்.

அவரது யோசனைக்கு அமைய மக்களுக்கு இருக்கும் மனித உரிமைகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்த கல்வித்திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர் பிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

முக்கியமாக வடக்கில் புதிதாக ஸ்தாபிக்கப்பட உள்ள மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளுக்கு மனித உரிமைகள் தொடர்பில் தெளிவுபடுத்துவது குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கவனம செலுத்தி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# சமுர்த்தி முகாமையாளர்கள் சுகவீன விடுப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சமுர்த்தி முகாமையாளர்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்படும் செய்திக்கு எதிராக யாழ். மாவட்டத்தில் உள்ள 34 சமுர்த்தி வங்கிகளிலும் பிரதேச செயலகங்களிலும் மகா சங்கங்களிலும் பணியாற்றும் முகாமையாளர்கள் சுகவீனவிடுப்புப் போராட்டத்தை இன்று முன்னெடுக்கவுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

அத்தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

சமுர்த்தி வேலைத்திட்டம் தொடர்பாகவும் அவ்வேலையை முன்னெடுத்து வறுமை தணிப்பிற்கு வழிவகுக்கும் சமுர்த்தி முகாமையாளர்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையிலும் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் உண்மைக்குப் புறம்பான செய்திகளால் இவ்வேலைத் திட்டத்துடன் இணைந்துள்ள பொதுமக்கள் மத்தியில் அபகீர்த்தி ஏற்படுத்தப் படுகிறது.

இச்செய்தியானது மனநிலையில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. சமுர்த்தி முகாமையாளர்கள் இம் மண்ணில் கல்விப் பாரம்பரியத்தினூடாக வெளியேறி இம்மண்ணில் மக்கள் கெளரவமாக வாழவேண்டும் என்ற அடிப்படையில் காலநேரம் பாராது ஏழை மக்களுக்கு தன்னை அர்ப்பணித்து இவ்வேலைத் திட்டத்துடன் இணைந்து பணியாற்றுகின்றனர்.

இவர்களை இழிநிலைக்கு இட்டுச் செல்லும் செய்திகளை உறுதிப்படுத்தலின்றி வெளியிடுவதனை ஆட்சேபித்தும் இதற்குச் சரியான பதில் கிடைக்க வேண்டியும் இச்சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கிளி.முச்சக்கரவண்டி சங்க பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கப் பொதுக் கூட்டம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் எதிர் வரும் 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கப் பொதுக்கூட்டம் சங்க யாப்பின்படி வருடத்திற்கு ஒரு முறை கூடி முச்சக்கரவண்டி உரிமையாளர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதும் புதிய நிர்வாகத்தை தெரிவதும் வழக்கம்.

இருப்பினும் தற்போதுள்ள சங்க நிர்வாகத்தினர் ஒரு வருடமும் 10 மாதங்கள் ஆகியும் இதுவரைக்கும் சங்கப் பொதுக் கூட்டத்தை கூட்டாத காரணத்தால் இலங்கை சட்ட உதவி ஆணைக் குழுவின் கிளிநொச்சி கிளையிடம் எழுத்து மூலமாக முறையிடப்பட்டது.

இதையடுத்து கடந்த 4 ஆம் திகதி கிளிநொச்சி முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் சங்கத்தின் தலைவருடன் சட்ட உதவி ஆணைக்குழுவினர் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலையடுத்து எதிர்வரும் 27 ஆம் திகதி சங்கத்தின் பொதுக் கூட்டத்தை கூட்டுவது என முடிவெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# நாடகமும் அரங்கியலும் செய்முறை வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் பரீட்சைக்குத் தோற்றி செய் முறைப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் பயிற்சி வகுப்புக்கள் எதிர் வரும் 16, 17 ஆம் திகதிகளில் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம் பெறவுள்ளன.

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ் பயிற்சி வகுப்புக்கள் இரு நாட்களும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளன. துறை சார்ந்த தகுதி வாய்ந்த வளவாளர்களால் இப்பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

இருநாள் பயிற்சி வகுப்புக்களிலும் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பதாக தமது பெயர் விபரங்களை 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலா மன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள். (அ)

# இனவாதத்தை சிங்கள மக்கள் தூக்கியெறிந்து விட்டனர்

## அமைச்சர் விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த மாகாண சபைத் தேர்தலில் இலங்கையின் பெரும்பான்மை சிங்கள சமூகம் இனவாதத்தை நிராகரித்துள்ளதை காணக் கூடிய தாக இருந்தது என லங்கா சமசமாஜ கட்சியின் செயலாளரும் சிரேஷ்ட அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலில் பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்கள் இனவாதத்தை நிராகரித் தமை இந்த தேர்தலில் விசேடமான அடையாளமாக அமைந்தது.

இனவாதத்துக்குஎதிராககுரல்கொடுத்து வரும் இலங்கை சோசலிச முன்னணியில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டனர்.

அதேபோல் அதில் அங்கம் வகிக்கும் இலங்கை மக்கள் கட்சியின் வேட்பாளர் குருநாகல் மாவட்டத்தில் வெற்றி பெற்றமை என்பன பெரும்பான்மை பௌத்த சிங்கள சமூகம் இனவாதிகளை நிராகரித்துள்ளதை காட்டுக்கிறது என தெரிவித்துள்ளார். (அ-2)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## தேடுவது உனக்கு கிடைக்கும்



❖ வெண்ணெய் எடுக்க சூரிய உதயத்திற்கு முன்பாக கடைய வேண்டும். பகலில் கடைந்தால் நன்றாகச் சேராது. அதுபோல் சிறுவயதிலேயே ஆன்மிக நெறியில் நின்று மனதைக் கடவுளிடம் செலுத்தினால்தான் இறைக்காட்சி கிடைக்கும்.

❖ மனிதனின் மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. அது கிழிந்து, நாலாப் பக்கங்களிலும் ஓடிவிட்டால் அதை ஒன்று சேர்ப்பது சிரமம். அதுபோல் மனம் பல வழிகளில் சென்று, உலக விஷயங்களோடு ஈடுபட்டிருக்கும் போது அதைக் குவித்து ஒருமுகப்படுத்துவதும் சுலபமல்ல.

❖ கடவுளைத் தேடுபவன் அவரை அடைகிறான், செல்வத்தைத் தேடுபவன அவற்றை அடைகிறான். நீ எதைத் தேடுகிறாயோ அதையே அடைவாய்.

❖ நான் என்னும் அகங்காரம் அழியும்போது கடவுள் தோன்றுகிறார். ஒருவனது அகங்காரம் அவனது உடல் இருக்கும் வரை அவனைவிட்டு முற்றிலும் நீங்குவதில்லை.

❖ ஒளியை உணர்பவன் இருளையும் உணர்கிறான். பாவம் தெரிந்தவனுக்கு புண்ணியமும் தெரியும் குணத்தை அறிந்தவன், குற்றத்தைப் பற்றியும் அறிந்திருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் இந்திய டெஸ்ட் அணியில்

## நம்பிக்கை தெரிவிக்கிறார் ரோகித் ஷர்மா

இந்திய டெஸ்ட் அணியில் விளையாடும் வாய்ப்பு விரைவில் கிடைக்கும் என்று ரோகித் ஷர்மா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடைபெற்ற சம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் மும்பை இந்தி யன்ஸ் அணி 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ரோயல்சை வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. இந்த ஆண்டில் மும்பை இந்தியன்ஸ் அணி ரோகித் ஷர்மா தலைமையில் கைப்பற்றிய 2 ஆவது கிண்ணம் இதுவாகும். கடந்த மே 6ஆம் திகதி ஐ.பி.எல். கிண்ணத்தை வென்றிருந்தது.

சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை வென்ற பின்னர் மும்பை இந்தி யன்ஸ்அணிதலைவர் ரோகித்ஷர்மா அளித்த பேட்டியில் கூறுகையில்,

நவீன கிரிக்கெட்டில் அணியில் தொடர்ந்து இடத்தை தக்க வைப்பது முடியாத விடயம். டெஸ்ட் போட்டியில் அறிமுகம் காண நான் காத்து திருக்கிறேன். அந்த வாய்ப்பு விரைவில் கிட்டும் என்று நம்புகிறேன். சரியான நேரம் மற்றும் வாய்ப்புக்காக நான் காத்திருக்கிறேன்.

சம்பியன்ஸ் லீக் வெற்றி எங்களுக்கு எளிதாக கிடைத்து விடவில்லை. எங்கள் அணி மீது நிறைய எதிர்பார்ப்பு இருந்தது. இதனால் ஏற்பட்ட அதிகப்படியான நெருக்கடியை நாங்கள் நல்ல முறையில் கையாணடோம் என்று நினைக்கிறேன். இந்த போட்டியில் நாங்கள் நிறைய சிறப்பான பண்புகளை வெளிப்படுத்தினோம்.

ஹர்பஜன்சிங் சிறந்த மட்ச் வின்னர். அவரது துடுப்பாட்ட நிலைகுறித்து நான் கவலைப்படவில்லை. அவர் அருமையாக செயற்பட்டு ஆட்டத்தை எங்களுக்கு சாதகமாக திருப்பினார். அவர் ஒரே ஓவரில் 3 விக்கெட்டுகள் வீழ்த்தியது எங்களுக்கு மிகவும் முக்கியமானது. ஒன்று, இரண்டு ஓவர்களின் அடிப்படையில் போட்டியின் முடிவு அமைந்ததாக நான் நினைக்கவில்லை.

அணித் தலைவர் சிறப்பாக விளையாடினால் அணி யினரை ஈர்க்க முடியும். அணித் தலைவர் டோனியை போல் நான் பொறுப்புடன் அணியை வழிநடத்தியதாக நம்புகிறேன். அணியின் எல்லா வீரர்களும் நல்ல பங்களிப்பையும், ஆதரவையும் அளித்தனர். 20 ஓவர் போட்டியில் இருந்து ஓய்வு பெறும் டெண்டுல்கருக்கு இது சரியான வழியனுப்பு விழா என்று நான் நினைக்கிறேன். டெண்டுல்கருக்காக கிண்ணத்தை வென்றது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரே ஆண்டில் இரண்டு கிண்ணத்தை வென்றது பூரிப்பாக இருக்கிறது.

இவ்வாறு ரோகித்ஷர்மா கூறினார்.

26 வயதான ரோகித்ஷர்மா இதுவரை 102 ஒருநாள் போட்டி மற்றும் 35 இருபது ஓவர் போட்டியில் விளையாடி இருந்தாலும் இன்னும் டெஸ்ட் போட்டியில் அறிமுகமாகவில்லை.



## பந்து வீச்சில் சர்ச்சை



தென்னாபிரிக்க அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஜொஹான் போத்தாவின் பந்துவீச்சுத் தொடர்பாக முறையிடப்பட்டுள்ளது. சட்டரீதியற்ற பந்துவீச்சுப் பாணியைக் கொண்டுள்ளதாகவே அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தென்னாபிரிக்க அணி யின் ஒப்பந்தத்திலிருந்து விலகி, தெற்கு அவுஸ்திரேலியா சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றிவரும் ஜொஹான் போத்தா, அங்கு உள்ளூர்ப் போட்டியில் வைத்தே பந்தை எறிவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் பந்தை வீசியெறிவது தொடர்பான நடைமுறையின்படி, ஜொஹான் போத்தா தொடர்ந்தும் பந்துவீசுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்தோடு, ஜொஹான் போத்தா பந்தை எறிவதாக நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே அவர் பந்துவீசுவதற்குத் தடை விதிக்கப்படுவார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை விதிகளின்படி, பந்தை வீசியெறி வதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வீரரொருவர், 14 நாட்களுக்குள் அத தொடர்பான பரிசோதனைக்குள்ளாக்கப்பட வேண்டும். இதற்கு முன்னரும் பந்தை வீசியெறிவதாக பலமுறை குற்றஞ்சாட்டப்பட்ட ஜொஹான் போத்தா, இறுதியாக 2009ஆம் ஆண்டு குற்றஞ்சாட்டப்பட்டு, தூஸ்ரா பந்தினை வீசுவதற்குத் தடை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நியூசிலாந்து - பங்களாதேஷ் டெஸ்ட் இன்று ஆரம்பம்

நியூசிலாந்து கிரிக்கெட் அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டி மற்றும் ஒரே ஒரு 20 ஓவர் போட்டியில் விளையாடுவதற்காக பங்களாதேஷ் சென்றுள்ளது.

நியூசிலாந்து- பங்களாதேஷ் மோதும் முதல் டெஸ்ட் போட்டி சிட்டகாங்கில் இன்று ஆரம்பமாகிறது. பங்களாதேஷ் அணி இதுவரை நியூசிலாந்தை வென்றது இல்லை. முஸ்பிக்குர் ரகீம் தலைமையிலான அந்த அணி முதல் முறையாக நியூசிலாந்தை வெல்லும் ஆர்வத்துடன் உள்ளது.

இரு அணியும் 9 டெஸ்டில் மோதியுள்ளன. இதில் நியூசிலாந்து 8 டெஸ்டில் வெற்றி பெற்றது. ஒரு டெஸ்ட் சமநிலையானது.

## ராஜஸ்தான் அணியின் புதிய தலைவராக ஷேன் வொட்சன்

ராஜஸ்தான் அணியின் புதிய தலைவராக ஷேன் வொட்சனை நியமிக்கலாம் என்று அந்த அணியின் தலைமை பயிற்சியாளர் அப்டன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்ற ஐந்தாவது சம்பியன்ஸ் லீக் டி20 தொடரின் இறுதிச்சுற்றில் மும்பை அணி, ராஜஸ்தான் அணியை வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்தது.

இப்போட்டியுடன் மும்பை அணியின் சச்சின், ராஜஸ்தான் அணியின் அணித் தலைவர் ராகுல் டிராவிட் விடைபெற்றன்ர்.

இதையடுத்து ராஜஸ்தான் அணியின் புதிய அணித்தலைவராக அவுஸ்திரேலிய சகலதுறை வீரர் ஷேன் வொட்சன் நியமிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

இது குறித்து பயிற்சியாளர் அப்டன் கூறுகையில், ராஜஸ்தான் அணியை டிராவிட் சிறப்பாக வழிநடத்தினார். மும்பை அணிக்கெதிரான இறுதிச்சுற்றில் நடுவரிசையில் துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றியதால் தோல்வியடைய நேரிட்டது என்றார்.

## டெனிஸ் தரப்படுத்தலில் நடால் முதலிடம்

ஏ.டி.பி., டெனிஸ் ஒற்றையர் பிரிவு தரப்படுத்தலில், ஸ்பெயின் வீரர் ரபெல் நடால், முதலிடத்துக்கு முன்னேறினார்.


டெனிஸ் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை, ஏ.டி.பி., வெளியிட்டது. ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் ரபெல் நடால், 11,160 புள்ளிகளுடன் இரண்டு ஆண்டுகளுக்கு பின் மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறினார். கடைசியாக இவர், 2011ஆம் ஆண்டு ஜூலையில் வெளியிடப்பட்ட தரவரிசையில் முதலிடம் பிடித்தார். சமீபத்தில் பீஜிங்கில் நடைபெற்ற சீன திறந்த டெனிஸ் தொடரின் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது இம்முன்னேற்றத்துக்கு காரணம். இதனையடுத்து, 101 வாரங்களாக முதலிடத்தில் இருந்த சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், 11,120 புள்ளிகளுடன் 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

அடுத்த இரண்டு இடங்களில் பிரிட்டனின் ஆன்டி முர்ரே, ஸ்பெயினின் டேவிட் பெரர் ஆகியோர் நீடிக்கின்றனர். டோக்கியோவில் நடைபெற்ற ஜப்பான் திறந்த டெனிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற, ஆர்ஜென்டினாவின் ஜுயன் மார்டின் டெல் போட்ரோ, 7ஆவது இடத்தில் இருந்து 5 ஆவது இடத்துக்கு முன்னேறினார். செக் குடியரசின் தாமஸ் பெர்டிச் (6ஆவது இடம்), சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் (7ஆவது இடம்) ஆகியோர் தலா ஒரு இடம் பின்தங்கினர்.

இளம் இந்திய வீரர் சோம்தேவ் தேவ் வர்மன், 97ஆவது இடத்தில் இருந்து 95 ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

**போபண்ணா அபாரம்**

ஜப்பான் திறந்த டெனிஸ் இரட்டையரில் சம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் ரோகன் போபண்ணா, இரட்டையர் பிரிவு தரப்படுத்தலில், 7ஆவது இடத்தில் இருந்து 5ஆவது இடத்துக்கு முன்னேறினார். மற்றொரு இந்திய வீரர் லியாண்டர் பயஸ், ஒரு இடம் பின்தங்கி, 7ஆவது இடம் பிடித்தார். இந்தியாவின் மகேஷ் பூபதி 10ஆவது இடத்தில் நீடிக்கிறார். இளம் இந்திய வீரர்களான திவிஜ் சரண் (72ஆவது இடம்), புரவ் ராஜா (93ஆவது இடம்) ஆகியோரும் பின்னடைவை சந்தித்தனர்.



**சானியா முன்னேற்றம்**

சீன திறந்த டெனிஸ் இரட்டையரில் பட்டம் வென்ற இந்தியாவின் சானியா மிர்சா, 12ஆவது இடத்தில் இருந்து 11ஆவது இடத்துக்கு முன்னேறினார். ஒற்றையரில் முதல் மூன்று இடங்களில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், பெலாரசின் விக்டோரியா அசரன்கா, ரஷ்யாவின் மரியா ஷரபோவா ஆகியோர் நீடிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநாட்டை புறக்கணிப்பதால் தமிழர்களுக்கு எந்த நன்மையுமில்லை

## டொரன்டோ ஸ்ரார் ஆலோசனை

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டை கனடா புறக்கணிப்பதன் ஊடாக தமிழ் மக்களுக்கு எந்த வொரு அனுகூலமும் ஏற்படாது என்று கனடாவின் தேசிய நாளிதழ் தெரிவித்துள்ளது.

தமது ஆசிரியர் தலையங்கத்தில் இலங்கையில் போர் முடிவடைந்து நான்கு வருடங்களாவதாக குறிப்பிட்டுள்ள டொரன்டோ ஸ்டார் நாளிதழ், இந்த கருத்துகளை பதிவு செய்துள்ளது.

இலங்கை மீது மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் கனேடிய பிரதமர் பங்கேற்கும் போது அந்த குற்றச்சாட்டுக்களை சரி செய்யும் வகையில் அழுத்தங்களை கொடுக்க முடியும்.

அல்லாத பட்சத்தில் பொதுநலவாய நாடுகளுக்கு மத்தியில் தனிமைப்படுத்தப்படும் நிலை ஏற்படும். இது கனடாவில் உள்ள ஒரு இலட்சத்து 40 ஆயிரம் எண்ணிக்கையான தமிழர்களுக்கும் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கும் நன்மை பயக்காது.

பொதுநலவாய மாநாடு தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன்,

கனடா மாநாட்டை புறக்கணிப்பது சிறந்த முன்னெடுப்பு அல்ல என்று குறிப்பிட்டுள்ளார். அதனை புறக்கணிக்காமல், இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு தேவையானவற்றை வெற்றி கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் சி.வி விக்னேஸ்வரனின் இந்தக் கருத்துடன் கனேடிய பிரதமர் ஹாப்பரின் கருத்து முரண்பட்டுள்ளதாக டொரன்டோ ஸ்டார் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-11)

# யாழ்.நகரப்பகுதியில் உள்ள புடைவைக்கடை எரிந்து நாசம்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரிய கடை வீதியில் அமைந்துள்ள புடைவைக் கடை ஒன்று நேற்றிரவு 9 மணியளவில் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

கிங் பசன் என்னும் புடைவைக் கடையே இவ்வாறு எரிந்து சாம்பலாகியுள்ளது.

நேற்று இரவு 9 மணியளவில் ஏற்பட்ட மின்சார ஒழுக்கு காரணமாக இவ்விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புடைவைக் கடை எரிந்ததன் காரணமாக பல இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக உரிமையாளர் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் தீ அணைக்கும் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து தீயினை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததோடு தீயினை அருகில் இருக்கும் கடைக்கு பரவாமல் கட்டுப்படுத்தினர்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-11)

# அரசியல் பிரச்சினையை...

இந்தச் சந்திப்பினையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை சந்தித்து ஒரு சுமுகமான பேச்சை, கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டோம்.

அதிலே வடக்கு மாகாண சபையின் சகல நடவடிக்கைகளுக்கும் இந்தியா தன்னாலான உதவிகளைச் செய்யும் என்றும் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

முக்கியமாக மீனவர்களுடைய பிரச்சினை சம்பந்தமாக குறிப்பிட்டார். அதாவது கடலின் இரு பக்கங்களிலும் இருக்கும் மீனவர்களும் தங்களுடைய பிரச்சினைகளைத் தாங்களே பேசித் தீர்த்துக் கொள்வது அவசியம் என்ற அந்த ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்.

அத்தோடு இரு நாடுகளும் அது சம்பந்தமாக பேசி மீனவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகரும் உடன் இருந்ததனால் மீனவர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் எனக் கருதுகின்றேன்.

அதுமட்டுமின்றி, பொதுவான பல விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினோம் என்றார்.

இதன்போது மாகாண சபைக்கு அதிகாரங்கள் பகிரப்படுவது தொடர்பாக பேசப்பட்டதா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது அது தொடர்பாக அதிகம் பேசவில்லை. ஆனால் அது தொடர்பாக ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் தங்களுடன் பேசிக் கொள்ளலாம் என்ற உத்தரவாதத்தினை வழங்கினார்.

அது தற்போது எங்களுக்கு போதுமானதாக வுள்ளது என்றார். இதனையடுத்து தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பாக பேசப்பட்டதா என கேட்டபோது, தீர்வுத் திட்டம் சம்மந்தமாக நாங்கள்தான் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார் என்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக தாங்கள் தெரிந்து வைத்திருப்பதாகவும் அது சம்பந்தமாக முடிவு எடுப்பதில் அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசித்தான் முடிவெடுக்க வேண்டும் என்ற கருத்தையும் முன்வைத்தார். பேசித்தான் தீர்வை முன்வைக்க முடியும் என்ற கருத்தையும் சல்மான் குர்ஷித் கூறியிருந்தார் என்றார்.

இதேவேளை கடந்த காலத்தில் அரசாங்கத்திற்கும் கூட்டமைப்பிற்கும் இடையில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றும் எந்தவித்மான தீர்வும் எட்டப்படாத சூழ் நிலை காணப்படுகின்றதே? என மறுபடியும் கேள்வி எழுப்பிய போது பேச்சுவார்த்தைகள் முன்னர் இடம் பெற்று இருக்கலாம். ஆனால் ஒரேவிதமான முடிவுகள் எப்போதுமே வருமென்று கூற முடியாது.

உலகிலே பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றபோது முன் னைய பேச்சு வார்த்தைகளின் முடிபுதான் பின்னால் பேச்சு வார்த்தைகளுக்கும் ஏற்படக் கூடும் என்றும் நாங்கள் ஒரு முடிவிற்கு வரகூடாது.

முன்பு இடம் பெற்ற கலந்துரையாடல்களுக்கும் சந்திப்புகளுக்கும் வித்தியாசம் உள்ளது.

இதில் இந்தியாவும் பங்கு எடுத்துக் கொள்கிறது எனப் பதிலளித்தார்.

இதேவேளை அரசாங்கத்திற்கும் வடக்கு மாகாண சபைக்கும் அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் இடம் பெறும் சந்திப்பில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்கும் என்று கூறுகின்றீர்களா, எனக் கேட்டபோது,

அப்படி ஒன்றும் இல்லை பிரச்சினைகளை நாங்களே பேசித் தீர்க்க வேண்டும்.

இந்தியா தன்னாலான உதவிகளையும் அனுசரணைகளையும் வழங்கும் என்ற வகையில் உறுதி அளித்திருந்தார் சல்மான் குர்ஷித் என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சிங்ஹா உள்ளிட்டவர்களும் பங்கு கொண்டிருந்தனர். (எ-6)

## ஜனாதிபதியுடன்...

கலந்துரையாடப்பட்டன.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் வ.கே.சிங்ஹாவும் இந்திய வெளி விவகார அமைச்சு மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வலு, சக்தி வள அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம, இந்தியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (எ-11)

## நுளம்பு ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று இன்று காலை 8 மணிக்கு யாழ்.சன்மார்க்க வித்தியாலய முன்றலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.நகர் I பொது சுகாதார பரிசோதகர் புண்ணியமூர்த்தி ஆறுமுகதாஸ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சன்மார்க்க பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். இவ் ஊர்வலமானது காலை 8 மணிக்கு ஆரம்பமாகி 9 மணிக்கு நிறைவடையும்.(எ-11)

## உலக உளநலநாள் நிகழ்வும் நூல் வெளியீடும்

மெய்யியல்-உளவியல் துறையினால் உலக உளநல நாள் நிகழ்வும் **உளவியல** புத்தக வெளியீடும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியில் நிகழ்த்தப்படவுள்ளது. (எ)

# சல்மான்...

இதன்பின்பு யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் பிற்பகல் 3.30மணியளவில் யாழ்.சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் மதகுருமார்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் தலைவர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையினால் வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றம் சம்பந்தமான மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அத்தோடு இந்த நிகழ்வில் போரின்போது பாதிக்கப்பட்ட சிறிய வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு சல்மான் குர்ஷித்தால் உதவிப்பணமும் வழங்கப்பட்டது.

இதன்பின்பு வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனையும் சந்தித்து கலந்துரையாடினார். (எ-6)

# சபாநாயகர் சித்தார்த்...

பிரமாணம் செய்த பின்பு அமைச்சர்கள் யார் என்பது தொடர்பாக அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

அத்தோடு அமைச்சர் பதவியில் விருப்பம் உடையவர்கள் தமது கட்சித் தலைமைகள் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறும் கேட்டிருந்தார்.

கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்குள் இடம்பெற்றும் தீர்வு எட்டப்படாத நிலையில் இந்த அறிவிப்பை கூட்டமைப்பின் தலைவர் விடுத்திருந்தார்.

இந்நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிட்ட (இலங்கை தமிழரசுக் கட்சி) த. குருகுலராஜா கல்வி அமைச்சராகவும், வவுனியா மாவட்டத்தில் போட்டியிட்ட பி. சத்தியலிங்கம் சுகாதார அமைச்சராகவும், விவசாய அமைச்சராக யாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட பொ. ஐங்கரநேசனும், உள்ளூராட்சி அமைச்சராக மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்ட டெனிஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் மாகாண அமைச்சர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியான புளொட் அமைப்பு புறக்கணிக்கப்பட்டதனால் அதன் தலைவரும் மாகாணசபை உறுப்பினருமான சித்தார்த்தன் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனவும் அதேவேளை மாவட்டத்திற்கு ஒரு அமைச்சுப் பதவி என்ற ரீதியில் பார்க்கும்போது முல்லைத்தீவு மாவட்டம் புறக்கணிக்கப்பட்டதால் பிரதி சபாநாயக்கர் பதவி அந்த மாவட்டத்தில் போட்டியிட்டு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவருக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு முதலமைச்சர் முன்னிலையில் நாளை மறுதினம் 11 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (எ-6)

# வடபகுதி...

கணக்காளர்கள் மற்றும் பதில் கணக்காளர்கள் அனைவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது."

இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள கணக்காளர்களின் இடங்களுக்கு சிங்கள இனத்தை சேர்ந்த 13 கணக்காளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கிளிநொச்சி கல்விவல்யத்திற்கு சிங்களவர் ஒருவர் கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சுகாதாரத் திணைககளம் உள்ளிட்ட வேறு சில திணைங்களங்களில் கடமையாற்றிய கணக்காளர்களுக்கும் இவ் அதிரடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் புதிய ஆட்சி நிர்வாகம் செயற்படுவதற்கு முனனதாக, இவ் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

வெங்கடேசா வீதி,
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
புதிய வீடு 1 ½ பரப்பு
விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:**
**0779397536**

(4134)



## விற்பனைக்கு

- 10 KV'லேடன் ஜெனரேட்டர் இந்தியன் சைனா டயனமோ கப்புள் செய்தது விலை - 120,000/-
- ஐஸ்கிறீம் கொம்ரேசர் இஸ்லண்ட் பழைய மொடல் விலை 160,000/-
- டீப்பிரிஜ் 5 அடி விலை 35,000/-

தொடர்புகட்கு :
0771573997, 0235689137

(4129)


## இந்தியா...

சல்மான் குர்ஷித்தின் சந்திப்பினையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இந்திய வெளி விவகார அமைச்சர் சல்மான் குர்ஷிததுடனான இன்றைய (நேற்று) சந்திப்பின் போது ஜனாதிபதி முன்னிலையில் நான் எனது பதவிப்பிரமாணத்தை செய்தது நல்லது என்ற ஒரு கருத்தை முன்வைத்திருந்தார்.

எங்களிடம் இருக்கும் சந்தேகங்களை குறைத்து எங்கள் பிரச்சினைகளை தீர்க்க முடியும் அல்லது பேசித்தீர்க்க முடியும் என்ற கருததையும் அவர் முன்வைத்திருந்தார் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-6)


## வேலைவாய்ப்பு

(4133)

- **Marketing Executive**
  கண்ணியமானோர் தேவை
- **Hardware Technician**

நேரில் வரவும் (9 AM-1 PM) 0778435224

**கோலாசிற்றி** தொழில் வங்கி
224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## தெரிவுக்குழு...

ஆராய்ந்துள்ளனர்.

இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சரின் இரண்டு நாள் அரச முறைப் பயணத்தின் ஒரு கட்டமாகவே கலந்துரையாடல் இடம் பெற்றதாக ஜனாதிபதி ஊடகப்பேச்சாளர்மொஹான் சமரநாயக்க தெரிவித்தார்.

இலங்கையால் முன்னெடுக்கப்படும் ஜனநாயக நடவடிக்கைகளை இந்தியா வரவேற்பதாகவும் சல்மான் குர்ஷித் இதன் போது தெரிவித்துள்ளார். (எ-11)


## OPTIMO GROUP SRI LANKA
### VACANCY

Optimo Group Company ஆரம்பிக்கும் 2-வது கிளைக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஆர்வமும், தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர்.

- மேற்பார்வையாளர் (Supervisor)
- முகாமைத்துவ பயிற்சியாளர் (Management Trainee)
- களஞ்சிய மேற்பார்வையாளர் (Store Supervisor)
- சந்தைப்படுத்துனர்கள் (Distributors)

ஆகியோர் தேவைப்படுகின்றனர்.

- வயதெல்லை 18-35
- தங்குமிடம் & உணவு இலவசம்.
- இலவசமாக சிங்கள & ஆங்கில வகுப்புக்கள் நடைபெறும்.

(4135)

தொடர்புகளுக்கு : **077 190 6728, 077 556 6224**



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

*Learn French The French Way*
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (மன்னார், வன்னி மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது *Certificate* அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. யாழில் 1976 இல் இருந்து...



- An international language, the language of culture
- A language for education, a language for job market
- A language that is fun to learn

➢ Just say "*Yes, I can... speak French*"

குறிப்பு: தற்போது *A/L* எடுத்த மாணவர்களுக்கு விசேட அனுமதிகள்...

(4091)

புதிய வகுப்புகளுக்கு உடன் பதிவு செய்யவும் (சனி, ஞாயிறு)
61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)



# Sunjeys Tourism தின்
## *UR October Holiday Planing*




1வது வகை : Oct. 11 முதல் 13 வரை கண்டி, மாத்தளை (பின்னவல உட்பட) நுவரேலியாவில் உள்ள முக்கிய இடங்கள் சென்று வர, ஒருவருக்கு ரூபா 8900/- மட்டுமே!

2வது வகை : வவுனியாவிற்கு அப்பாலுள்ள கோவில்களும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும் 16ம் திகதி முதல் 20ம் திகதி வரை. கட்டணம் ரூபா. 14900/- மட்டுமே. போகும் இடங்கள் : மடு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கதிர்காமம், கண்டி, மாத்தளை நுவரேலியா உட்பட.

**குறிப்பு :**

உணவு, தங்குமிடம், போக்குவரத்து (குளிரூட்டப்பட்ட) தொலைக்காட்சி, அட்ஜஸ்ரபிள் சீற் போன்ற சகல வசதிகளுடனும் சுற்றிப்பார்ப்பதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

ஆசனப் பதிவுகளுக்கு : ஆசனப் பதிவு முன் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

SUNJEYS TOURISM
713, Hospital Road, Jaffna.
0777 474 111, 021 221 7070

வரணி ஆசனப்பதிவு நிலையம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2868



## வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்

வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள தகவல்தொழில்நுட்ப டிகிறி. G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுதிகதி 12Oct.
மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)
புலமைப்பரிசிலிற்கு: Type <BIT><your name> & send to 772395895



இதுவரை எம்மால் அறிவிக்கப்பட்டவற்றில், இது முற்றிலும் மாறுபட்ட, நன்மைகள் பல நிறைந்த ஆலோசனையாகும்.

**ஐரோப்பிய நாட்டில் படிக்க மாதாந்தம் 125000/- உழைக்க வெறும் ஏழு இலட்சம் மட்டும் போதும்**

- மிகமிக மலிவாக ஐரோப்பாவில் படிக்க, உழைக்க வாய்ப்பு

**தரையில் கண்ணியமாக படிக்க, உழைக்க வாய்ப்பு**

2 வருட விசா, முடிவில் அனுபவச் சான்றிதழ் பெற்று ஏனைய ஐரோப்பிய நாடுகளில் படிக்க உழைக்க அரியவாய்ப்பு.

**உணவு, இருப்பிடம், ரிக்கற் இலவசம்**

(அ-5041)

**உண்மையில் பொன்னான வாய்ப்புத்தான்.**

## திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090





## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

- எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- Excellent Teachers' Panel & Individual Attention

(C-5104)

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287

Batch1 : 12.10.2013
Batch2 : 14.10.2013
Batch3 : 19.10.2013
Batch4 : 21.10.2013

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299...

Evening & Weekend Classes for Employees also available.



## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) புதிய பிரிவுகள் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

*(Gov. Reg.No: W/A 76795)*

**Vivekananda Academy**, 0212220393
**221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.**
Tel: 0213216928, 0774842464

(C-5115)

*(Gov. Reg.No: W/A 76795)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.